After O\L
ENGLISH COURSES
Duration 6 Months
Basic English Programme
Cambridge (U.K) Certificate
(International Certificate)
Veal Business College
159A, Seaview Road
Trincomalee.
T.P 0770203201

அறைவு 02 இயம் 13

November 02-08, 2013

# மலைமுரசு

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 | பக்கங்கள் : 16 | Registered as a newspaper in Sri Lanka | பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்



## முரண்பாடுகளைக் களைந்து
# மக்களுக்குச் சேவை செய்யுங்கள்

திருமலையில் தலைவர் சம்பந்தன்

மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே நீங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். அத்துடன் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கையாலேயே அவர்கள் உங்களுக்கு வாக்களித்துள்ளனர்.

எனவே உங்களிடையேயுள்ள முரண்பாடுகளைக் களைந்து மக்களுக்குச் சேவை செய்வதை முன்னிலைப்படுத்துங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. இரா.சம்பந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கடந்த 30ம் திகதி அவரது இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே குறிப்பிட்ட சில உள்ளூராட்சி சபை மற்றும் மாகாணசபை அங்கத்தவர்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

திருமலையின் நகரசபைத் தலைவருக்கும், பிரதித் தலைவருக்கும் இடையே ஏற்பட்ட தகறாரைத் தொடர்ந்து 03



## பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் பாரதிபுரம்

திருகோணமலை மாவட்டத்தில், மூதூர்ப் பிரதேசச் செயலாளருக்குட்பட்ட கிராமமான பாரதிபுரம் கிராமம் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 03

## கிழக்கு மாகாண சபையில் தென்னமரவாடி
# காணி அபகரிப்பிற்கு எதிராகத் தீர்மானம்



திருகோணமலையின் வடக்கெல்லைக் கிராமங்களுள் ஒன்றான தென்னமரவாடிக் கிராமத்தில் மகாவலி வலயம் என்ற பெயரில் நடந்துவரும் காணி அபகரிப்பை தடுத்து அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற அவசர பிரேரணையை 03



## ஜோசப்பின் மனைவிக்கு அனுமதி



அமரர் ஜோசப் பரராசசிங்கத்தின் மனைவியைத் தொடர்ந்தும் கனடாவில் வாழ விடுவதில் தடையேதும் இல்லை என கனேடிய நீதிமன்றம் அறிவித்துள்ளதாகச் சர்வதேசச் செய்தி நிலையங்கள் தெரிவித்துள்ளன.

2005ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தின ஆராதனைகளின் பின்னர் ஆயுததாரிகளின் தாக்குதலில் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் கொல்லப்பட, அவரது மனைவியான சுகுணநாயகி காயமடைந்தார். அதனைத் தொடர்ந்து அவருக்குக் கனடாவில் தஞ்சமளிக்கப்பட்டது. பின்னர் கனடாவில் தடை செய்யப்பட்ட 03

## த.தே.கூ. இனவாதமே பேசுகின்றது
### கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாசார விழாவில் அமைச்சர்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2013ம் ஆண்டு கலாசார விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உயர் கல்வி அமைச்சர், சனாதிபதி இனப்பிரச்சனைக்குத் தீர்வாக வடமாகாண சபைத் தேர்தலை நடாத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கையளித்துள்ள போதும் கூட்டமைப்பு தொடர்ந்தும் இனவாதமே பேசி வருவதாகத் தெரிவித்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தலைமையில் 03



Admission Open
திருகோணமலையில்
ஒரேயொரு மும்மொழிச் சிறுவர் பாடசாலை
(தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)
சிறார்களுக்கான அனுமதி ஆரம்பம்
வயது 2 1/2 தொடக்கம்
வேல் சிறார் பள்ளி
Veal Montessori
No. 159' Sea View Road.
Trincomalee.
T.P 026 2227622
No.27. Lavender Lane.
Trincomalee.
T.P 026 3204840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU



159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071


## வணக்கம்
### சேவையும் சூழலும் !!!

"மக்களுக்குச் சேவை செய்யுங்கள்" என மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களிடேமே இனிமை யாகக் கடிந்துகொள்ள வேண்டிய நிலை தமிழரசுக் கட்சிக்கு நேர்ந்துள்ளது.

இவ்வாறு கேட்க வேண்டிய நிலை எழுந்துள்ளது எனில் அதனை ஒரு நிகழ்வாகக் கொள்ளாமல் குறிகாட்டியாகக் கொள்ள வேண்டிய அவசியம் அதன் பின்னே ஒளிந்து கிடக்கின்றது.

அது என்ன குறிகாட்டி என நாம் சிந்திக்கலாம். குறிகாட்டியென்பது ஒரு விடயத்தின் தற்போதைய போக்கு என்று கொள்ளலாம்.

தமிழரசியல் தலைவர்களின் தற்போதைய போக்கு (Style) எவ்வாறுள்ளது என்பதை அல்லது தற்போதைய போக்கு எவ்வாறு மாற்றமடைந்து கொண்டு செல்கின்றது என்பதையே இவ்வினிய கடிந்து கொள்ளல் எமக்குக் கூறுகின்றது போலும்.

இலங்கையின் அரசியல் தலைவர்களின் போக்கை உற்று நோக்கும் போது அதன் அடிப்படையானது "மக்கள் நோக்கிய" (people centred)எனும் பண்பிலிருந்து "சுயத்தை நோக்கிய" (self centred) பண்பிற்குத் தாவி விட்டதை அவதானிக்க முடியும். அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக அண்மையில் திறந்து வைக்கப்பட்ட அதிவேகப் பாதையினுள் "நோயாளர் காவு வண்டி" நுழைந்தாலும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்ற கட்டளையைக் கொள்ளலாம்.


20நிமிடங்கள் குறைவாக விமான நிலையத்திற்குச் செல்வது தனவந்தர்க்கு வேண்டுமேயொழிய வறிய மகன் 20 நிமிடம் தாமதமாக வைத்தியசாலைக்குச் சென்று மரணித்தல் ஒன்றும் அவ்வளவு முக்கியமில்லை தான்.

எனவே சுயத்தை நோக்கிய அரசியல் போக்கை வரித்துக் கொண்டுள்ள நாட்டின் பெரும்பாலான அரசியல்வாதிகளுடன் வாழும் ஒரு இன விடுதலைக்கான அரசியல் தலைமை அடிக்கடி தனது அமைப்பினரிடம் இவ்வாறு வேண்டுதல் வேண்டிய நிலை நிகழும்.

அமைப்பினர் இவ்வாறு மனந்தவறிப் போதல் என்பது பொதுவான ஒரு நிகழ்வே. அடிக்கடி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து அவர்களுக்கு மனஉணர்வூட்டல் பயிற்சிகளை, பேச்சுக்களை, அவர்களது பொறுப்பு பற்றிய கலந்துரையாடல்களை நிகழ்த்த வேண்டியிருக்கின்றது.

அவர்களும் மனிதர்கள் தான்...எல்லோரும் நம்பும் இறைவனின் திருக்கரத்திலிருந்து உதித்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களின் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் தமிழ்ச்சமூகம் தற்போது இல்லை. எனவே நீங்கள் எங்களுக்காகச் சேவை செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பே!

## அரசியற் சதுரங்கத்தில் தளம்பும் லங்கா ஐஓசியின் கூட்டுமுயற்சி



திருகோணமலையில் எண்ணெய் சேமிப்பு தாங்கிகளை குத்தகைக்கு பெற்ற இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக் கிளையான லங்கா ஐ.ஓ.சி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கூட்டு முயற்சி யொன்றைத் தொடங்க எடுத்த முயற்சி ஸ்தம்பிதமடைந்துள்ளது என ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

லங்கா ஐ.ஓ.சி இலங்கையுடன் ஒரு கூட்டு முயற்சிக்கான முன்மொழிவைக் கொடுத்து விட்டதெனவும் ஆனால் இலங்கைத் தரப்பிலிருந்து பதிலேதும் கிடைக்கவில்லையெனவும் இந்தியப் பெற்றோலிய செயலாளர் விவேக் ரா கூறினார்.

அண்மையில் தென்கொரிய தலைநகரான சோல் நகரில் நடந்த ஆசிய வலு வட்டமேசை மாநாட்டில் இலங்கை பெற்றோலிய அமைச்சருடன் இந்த விடயம் தொடர்பாக பேசியிருந்த வீரப்ப மொய்லியையும் இலங்கை அலட்சியம் செய்தது.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் குறைந்த மட்டத்தில் பங்கு பெறப்பேவதாக இந்தியா கூறியுள்ளது. இதை தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டுக்கு வராதுவிடின் சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் கூடுதலான நெருக்கத்தை ஏற்படுத்தப்போவதாக இலங்கை மிரட்டியுள்ளது.

2013இல் லங்கா ஐ.ஓ.சியுடன் ஒரு கூட்டு முயற்சியை தொடங்குவதற்கான முன்மொழிவை இலங்கை பிரஸ்தாபித்தது. இப்போது இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஒரு முழுமையான முன்மொழிவை தயாரித்துள்ள போதும் இலங்கை அதை தடுத்துள்ளது.

இது ஒரு அரசியல் பிரச்சினை எனவும் இதற்கு அரசியல் தலையீடு அவசியமெனவும் இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## கப்பல்துறையில் டெட்டனேட்டர்ஸ்

சட்ட விரோத மீன்பிடிக்காகப் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ஒரு தொகையான டெட்டனேட்டர்களை கடற்படையில் கிழக்குப் பிரிவு கைப்பற்றியுள்ளது.

திருகோணமலையின் கப்பல் துறைப் பகுதியில் இவை பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு விரைந்த கிழக்குக் கடற்படையில் மஹாவலி பிரிவு மின்வலுத்தேவையற்ற 110 டெட்டனேட்டர்களை கைப்பற்றியுள்ளது.

சந்தேகத்தின் பேரில் இவ்விடத்தில் எவரும் கைதாகவில்லை.

## சாரணர் ஜம்போரிக்கு இராணுவம் உதவி

ஊரணி சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலைச் சாரணர் ஜம்போரி நிகழ்விற்கு அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் உதவிகளை வழங்கியுள்ளனர்.

கல்லடிப் பிரிவிற்குப் பொறுப்பான 231 பிரிகேட் படையணியின் 23ம் பிரிவு இவ்வுதவிகளை வழங்கியுள்ளது.

இராணுவத் தன்னார்வத் தொண்டர்கள் குழுவாக சுமார் 60 மாணவச் சாரணருடன் இச் செயற்பாட்டினை முன்னெடுத்தனர்.

## 890,000 பெண்கள் கருக்கலைப்பு

சிங்கள பௌத்த இனத்தை குறைக்கும் நோக்கில் சிங்களப் பெண்களுக்கு கருக்கலைப்பு செய்யப்படுவது அதிகரித்து வருவதாக பொதுபலசேனா குற்றம் சாட்டியுள்ளது.

அதன்படி 8 இலட்சத்து 90 ஆயிரம் சிங்கள பெண்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள கருக்கலைப்பு மையங்களில் கருக்கலைப்பு செய்துள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்புக்கும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இடையில் நேற்று மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தேரர் இதனை கூறினார்.

பதின்மூன்று வருடங்களின் பின் தி-மூ-சேனையூர் வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் கதிர்காமத்தம்பி தனுஜன் 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அதிபர், ஆசிரியர்களுடன் சித்தியடைந்த மாணவனையும். படங்களில் காணலாம். (சச்சு)



## சட்டவிரோதமாகப் பயிர் செய்வோர் விரட்டப்படுவர்

மட்டு மாவட்டத்தில் அரசினால் மேய்ச்சல் நிலங்களாகப் பெயரிடப் பட்டுள்ள நிலங்களில் விவசாயம் செய்வோர் வெளியேற்றப்படுவர் எனப் பிரதி அமைச்சர் முரளீதரன் தெரிவித்துள்ளார்.

## முறைசாராப் பொருளாதாரப் பெண்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்

இலங்கையில் முறைசாராப் பொருளாதாரத் துறைகளில் ஈடுபட்டு வருமானமீட்டும் பெண்களுக்குப் பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. அக்குறைபாடுகளைக் களைந்து முறைசாராப் பொருளாதாரத் துறைப் பெண்களை ஊக்குவிக்க அரசு முன்வரவேண்டும் என பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு தெரிவித் துள்ளார்.

## பகலிற் பரிமாறுவோர் இரவில் பாலியல் தொழிலாளரா?

மட்டு போதனா வைத்திய சாலைக்கு முன்பாக அமைந்திருக்கும் உணவு விடுதியில் இரவு வேளையில் பாலியல் தொழில் நடப்பதாகத் தெரிய வந்ததை அடுத்து காவல்துறை அவ்விடுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளது.

காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரால் நடாத்தப்பட்டு வந்த இவ் உணவு விடுதியில் பகலில் உணவு பரிமாறுபவர்களாக செயற்படும் பெண்களே இரவில் பாலியல் தொழிலாளர்களாகச் செயற்பட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ளனர்.

## சொந்த வயலில் வேலை செய்தோரைத் தாக்கிய அத்துமீறல்காரர்கள்

மூதூர் பிரதேசத்தில் கங்குவேலி வவுணவில் வயற் பகுதிகளில் வேலை செய்து கொண்டிருந்த தமிழ் விவசாயிகள் மீது அடையாளம் காணப்பட்ட சிலரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நால்வர் காயமடைந்த நிலையில் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தாக்கப்பட்டவர்கள் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆவர். அவர்களைத் தாக்கியவர்கள் யுத்த காலத்தில் இவ் வயல் நிலங்களில் அத்துமீறி விவசாயம் செய்த ஊர்காவல் படையினர்கள் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ரி-56 சுடுகலன் ரவைகள் பாலத்திற்கருகில் மீட்பு

திருகோணமலை, இறால்குழி பாலத்திற்கு அண்மையில் சுடுகலன் ரவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளன. ரி-56, ஏ.கே 45 ரக சுடுகலனுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகளே இதன்போது மீட்க்கப் பட்டுள்ளன.

காவல்துறையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவை நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்த காவல்துறையினர் இதன் போது நான்கு பொட்டிகளில் 3,000 ரவைகள் உள்ளதாக காவல்துறையினர் குறிப்பிட்டனர். மேலதிக விரசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சசிகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்பாடுகளைக் ...

ஏற்பட்ட தகறாரைத் தொடர்ந்து காவல்துறையின் தலையீட்டில் அத் தகராறு தீர்க்கப்பட்டதும், பட்டணமும் சூழலும் பிரதேசசபையின் உறுப்பினர் ஒருவர் தற்காலிகச் சாரதி நியமனம் தொடர்பாக முரண்பட்டுக் கட்சி தாவ எத்தனித்தாக எழுந்த புகாராலும், வெருகல் பிரதேசசபையின் தலைவர் அரச கட்சியினரின் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றார் என்ற புகாராலும் ஏற்பட்டிருந்த இழுபறி நிலைமைகளைத் தீர்ப்பதற்கான இரகசியக் கூட்டமாகவே இக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இம் மூன்று உள்ளூராட்சி சபைகளின் அங்கத்தவர்களும் இக் கூட்டத்திற்கு விசேடமாக அழைக்கப் பட்டிருந்ததுடன் மேலதிகமாக மாகாண சபை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

கட்சிக் கிளைகளைப் புனரமைப்பது தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப் பட்டதாகவும் தெரிகின்றது.

## பட்டினிச்சாவை ....

இக்கிராமத்தில் உள்ளவர்கள் போரினால் பெரிதும் பாதிக்கப் பட்டவர்கள் என்பதுடன் சுமார் 125 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை (விதவைகள்)யும் கொண்டுள்ளது. இக்குடும்பங்களில் சுமார் 45 குடும்பங்கள் கடந்த சில நாட்களாகக் கடும் பட்டினியை அனுபவிப்பதாக தெரியவந்துள்ளது.

இத்தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து உடனடி நடவடிக்கையில் இறங்கிய மலைமுரசு முதற்கட்ட நிவாரணமாக சுமார் 100 கிலோ அளவுள்ள அரிசி மற்றும் பருப்பை பரோபகாரிகள் சிலரின் உதவியுடன் பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரான சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்கள் ஐயாவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

## கிழக்கு மாகாண .....

கிழக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது. இவ்வவசரப் பிரேரணையை கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட மாகாண சபை உறுப்பினருமான தண்டாயுத பாணி அவர்கள் முன்மொழிய, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரான அன்வர் வழிமொழிந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அன்வர் மலைமுரசிற்குத் தெரிவித்த போது குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தென்ன மரவாடி கிராமம் பழமை வாய்ந்த தமிழர்கள் வசித்து வந்த கிராமம். கடந்த கால யுத்தம் காரணமாக 1983ம் ஆண்டு காலப்பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் தற்பொழுதுதான் அவர்களில் ஒரு சிறு பகுதியினர் குடியமர்ந்துள்ளனர்.

எனவே முழுமையாக இன்னும் பூரணமாக குடியமர்த்தப்படாத நிலையில் மீண்டும் இவர்களுடைய காணிகள் மகாவலி எல் வலயம் அமைப்பதற்காக கையகப்படுத்தும் நடவடிக்கை சம்பந்தமாக பதவிஸ்ரீபுர பகுதியைச் சேர்ந்த தவிசாளருக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. குச்சவெளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இவ்விடயம் தொடர்பான கூட்டங்களுக்கு இம்மாவட்டத்தை சேர்ந்த ஏனைய அரசியல் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மற்றும் குச்சவெளி பிரதேச செயலகத்திற் குட்பட்ட அரசியல் பிரமுகர்களுக்கும் எந்த வித அறிவித்தலும் வழங்கப் படாமல் பதவி ஸ்ரீபுர பிரதேச சபையின் தவிசாளர் மட்டும் அழைக்கப்பட்டிருப்பது இந்த மாகாண சபையையே அவமதிக்கின்ற செயல்பாடு மாத்திரமன்றி இதுவரைக்கும் இந்த மாகாணத் தினுடைய காணி அமைச்சர் என்ற அடிப்படையில் தங்களுக்கு ஏதாவது தகவல் அறியப் படுத்தப்பட்டுள்ளதா என்று வினவியதற்கு குறிப்பிட்ட அமைச்சருக்கு எதுவும் தெரியாத நிலையில்

மாகாண சபைகளுக்கு 13வது யாப்பு திருத்தத்தின்படி காணி அதிகாரத்தில் இவ்வாரான மத்திய அரசினுடைய வேலைத்திட்டங்கள் இட்ம்பெறும் பொழுது மாகாண சபையினுடைய ஆலோசனை பெறப்பட வேண்டும் என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது

எனவே இம்மாகாணத்தில் இடம்பெறும் இவ் வேலைத்திட்டம் சம்பந்தமாக மாகாண அமைச்சர்கள் உட்பட மாவட்டத்தை பிரதி நிதித்துவபடுத்துகின்ற மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்காமல் செயற்படுவது என்பது இந்த மகாண சபை முறைமைக்கு அர்த்தமற்றது.

எனவே அப்பிரதேசத்திலுள்ள மக்கள் இருப்புப்பற்றி கருத்தில் எடுப்பதுடன் இந்த சபை இதற்கான தீர்வினை அம்மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்

## ஜோசப்பின் .....

விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் தொடர்புடையவர் என்றும் அவர் அவ்வமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்றும் 2011ம் ஆண்டில் குற்றஞ்சாட்டிய கனேடியக் குடிவரவு மற்றும் அகதிகள் சபை அவரைத் திருப்பி இலங்கைக்கு அனுப்புவதில் குறியாக இருந்தது.

எனினும் மீயுயர் நீதிமன்ற நீதிபதி அவர் திருப்பியனுப்பப்படுவதை விட கனடாவில் இருப்பதே சாலச் சிறந்தது எனத் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

## த.தே.கூ .....

நடந்தேறியது. அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் வடக்கில் நடைபெற்ற தேர்தலின் போது த.தே.கூ நீங்கள் வாக்களிப்பது தமிழருக்கா அல்லது சிங்களவருக்கா என அப்பட்டமாக இனவாதம் பேசியது. வடக்கில் எவ்வாறு அரசு சனநாயக அடிப்படையில் நீதியான தேர்தல் மூலம் தமிழருக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியதோ அதே போல அரசுடன் வடமாகாணசபை இணக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாகத் தமது மக்களின் ஆசைகளையும் அபிவிருத்தியையும் நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்தார்.

(16ம்பக்கத் தொடர்ச்சி)

## இழுபறி.....

காங்கிரஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

35 ஆண்டுகளுக்கு பின்னர் எமது ஊருக்கு கிடைத்த மேயர் எனும் பதவியை நாம் நிரப்பமாக அனுபவித்துக்கொள்ள எமது, கட்சியின் சம்மந்தப்பட்ட தலைமைபீடத்துடன் சாய்ந்தமருது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு சுமுகமாக பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாய்ந்தமருது மக்களின் சமூக வாழ்வியலை நெறிப்படுத்துவதில் சாய்ந்தமருதின் ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை என்றும் தனது கடமையிலிருந்து விலகிப்போன சந்தர்ப்பங்கள் கிடையாது. தற்போது எமது ஊரின் அரசியல் அந்தஸ்து சந்தித்துள்ள மேலே விபரிக்கப்பட்ட இச்சூழலை நெருக்கடியிலிருந்து ஐதாக்கி இதுகுறித்து தீர்மானங்களை சம்மந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைத்து ஒரு சாதகமான தீர்வை எமது மக்களுக்கு பெற்றுத்தர நம்பிக்கையாளர் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்

இந்த தீர்மானங்கள் தக்பீர் முழக்கத்துடன் கலந்து கொண்ட மக்களினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் கல்முனை மேயர் சிராஸ் மீராசாஹிப், மாநகர சபை உறுப்பினர்களான எம்.ஐ.எம்.பிர்தௌஸ், ஏ.ஆர்.அமீர், ஏ.நசார்தீன், சீ.எம்.முபீத், ஏ.எச்.எச்.நபார், கல்முனை விகாராதிபதி வண. சங்கரத்ன தேரர், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வை.எம்.ஹனிபா உள்ளிட்ட பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(16ம் பக்கத் தொடர்ச்சி)

## மீண்டும் சாம்பல் .....

உட்பட அனைவரும் பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் இரவு நேரப் பயணங்களுக்கு பெருந் தடையாக இக்கள்ளுக்கடை இருக்கும் என ஊர் மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கள்ளுக்கடை தொடர்பாக மலைமுரசில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து சாம்பல்த்தீவின் பத்திற்கும் மேற்பட்ட சமூக அமைப்புக்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையாலும், பட்டணமும் சூழலும் பிரதேசசபை மேற்கொண்ட நடவடிக்கையாலும் அக்கள்ளுக்கடை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

ஆனால் சில நாட்களின் பின்னர் இப் புதிய கள்ளுக்கடை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16ம் பக்கத் தொடர்ச்சி)

## 5ம் ஆண்டுப்.....

அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளுக்காகத் தான் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ''அமைச்சரவைக்கு நான் இவ்விடயத்தைத் தெரியப்படுத்தினேன். அதனைத் ஆராய்ந்த அமைச்சரவை இவ்விடயம்பற்றி மேலும் ஆராய அமைச்சரவை உபகுழுவொன்றை உருவாக்கியுள்ளது. அவ் உபகுழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே நடவடிக்கை எடுக்கப்படும்'' என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் இவ்வருடம் புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக் கேற்ப உயர்தரப் பரீட்சை நடைபெற்றதால் பரீட்சைப் பெறுபேறுகள் டிசம்பர் மாதமே வெளிவரும் எனவும் தெரிவித்தார்.

(16ம் பக்கத் தொடர்ச்சி)

## ஸ்ரீதரனின்....

மாவட்ட அமைப் பாளரான அருணாசலம் வேழமாலிகிதன் மற்றும் பொன்னம்பலம் லட்சுமிகாந்தன் ஆகியோர் சார்பில் முன்வந்த சிரேட்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தனது வாதத்தில் பொன்காந்தன் கடுமையாகச் சித்திரவதைக்குட்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், அவரைச் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடுமாறும் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டார்.

அதன்படி 5ஆம் சந்தேக நபரான லட்சுமிகாந்தனை சட்ட வைத்திய அதிகாரி முன் முன்னிலைப்படுத்தி சட்ட மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்யும்படி கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி அஜித் பிரியந்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு மேலதிக விசாரணைகளை நவம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# கிழக்கின் கலை இலக்கியப் பெருவிழா 2013

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய கலை இலக்கியப் பெருவிழா மட்டக்ககளப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகத்தில் இன்று இடம்பெற்றது. இவ்விழாவுக்கு திரு.டி டபிள்யூ.யு. வெலிக்கல, பணிப்பாளர் பண்பாட்ட லுவல்கள் திணைக்களம் அவர்கள் தலைமை தாங்கினார். முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஜனாப்.நஜீப்அப்துல்மஜீத் அவர்களும் சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சர் விமலவீர திசாநாயக்க அவர்களும் கௌரவ விருந்தினர்களாக மட்டக்களப்பு உதவிமாவட்ட செயலாளர் திரு.சோ.ரங்க நாதன் அவர்களும் கிழக்கு மாகாண பேரவைச் செயலாளர் திரு.கே.கருணா



கரன் அவர்களும் கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.டக்ளஸ்.ரணசிங்க அவர்களும் பாடசாலை அதிபர் ஆசிரியர் மாணவ மாணவிகளும் விருது பெறும் படைப்பாளிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 2012ம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் நூலுக்கான விருதும் 2013ம் ஆண்டிற்கான வித்தகர் விருதும் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது.

(சச்சு)

# தே.மீ.ஒ.இயக்கத்தின் உதவிகள் மக்களுக்கு

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட முத்துநகர், விளாங்குளம், கப்பல்துறை, சல்லி, பூம்புகார், லவ்லேன், வீரநகர், மனையாவெளி, கருமலையூற்று, கிளிக்குஞ்சுமலை ஆகிய கிராமங்களையும் சேர்ந்த, குடும்பங்களின் தலைமைத்துவத்தை தாங்கி வழிநடத்துகின்ற பெண்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் வழங்கியுள்ளது.




தே.மீ.ஒ.இ 36 நாடுகளில் செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் நன்நீர் கரையோர பிரதேச மீனவர்களின் மீன்பிடி, இடம் பெயர்ந்த மக்கள், கணவனை இழந்த பெண்கள் போன்றோருக்கு உதவித் திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

கணவனை இழந்த, கணவன் ஊனமுற்று இருக்கும், கணவன் காணாமல்போன, கணவனால் கைவிட்டுச் சென்ற பெண்கள் தனித்து அவர்களின் தலைமையில் குடும்பத்தை வழிநடத்திக் கொண்டு செல்கின்றனர்.

அவர்களுக்கே வாழ்வாதார திட்டத்தை வழங்கி வருகின்றோம் என அவ்வியக்கத்தின் இணைப்பாளர் சஞ்சனா மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

(அனுர-உதயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆளுநரின் பதவி பறிபோகுமா?

வடக்கு மாகாணசபை செயற்படத் தொடங்கியுள்ள நிலையில், முக்கியமான மூன்று விவகாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

முதலாவது, இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநரான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை நீக்குவது. இரண்டாவது, வடக்கிற்கு தனியான பொலிஸ் பிரிவை உருவாக்குவது. மூன்றாவது, வடக்கில் படைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் வாழ்வில் இராணுவத் தலையீடுகள் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பது.

இவையனைத்தும் தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டு, பிரசாரப்படுத்தப்பட்ட விவகாரங்கள் தான்.ஆனால், அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றை வலியுறுத்தியதற்கும், இப்போது வடக்கு மாகாண அரசை நிறுவிய பின்னர், அதனை வலியுறுத்த ஆரம்பித்துள்ளதற்கும் வேறுபாடுகள் உள்ளன.வடக்கு மாகாணசபையின் முதல் அமர்வு கடந்த 25ஆம் திகதி நடந்த போது, தமது முதலாவது உரையிலேயே, இந்த மூன்று விவகாரங்கள் குறித்தும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியிருந்தார். இதனால், இந்த விவகாரங்கள் கடும் வாதப், பிரதிவாதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநரான மேஜர் ஜெனரல் சந்திரசிறி, தேர்தலின் போது எவ்வாறு பக்கசார்புடன் நடந்து கொண்டார் என்பதைச் சுட்டிக்காட்டிய முதல்வர் விக்னேஸ்வரன், அவரை நீக்கிவிட்டு, ஜனாதிபதி வடக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய சிவில் ஆளுநர் ஒருவரை நியமிப்பார் என்று நம்புவதாக குறிப்பிட்டிருந்தார்.இதனை, உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசராக இருந்த போதிலும், முதல்வர் விக்னேஸ்வரன் இதனை அதிகாரத்தொனியில் குறிப்பிடவில்லை.

பரிவான முறையிலேயே - பவ்வியமான முறையிலேயே இதனை வெளிப்படுத்தியிருந்தார்.ஏனென்றால், இது சிக்கலான காரியம் என்பதும், அரசாங்கத்துடன் முட்டி மோதுவதன் மூலம் இதனைச் சாதிக்க முடியாது என்பதும் அவருக்கு நன்றாகவே தெரியும். அரசியல் களத்துக்கு அவர் வந்த பின்னர் இதனை பலமுறை எடுத்துக் கூறியுள்ளார.வடக்கு மாகாண சபையில் தனது முதல் உரையில் கூட 13ஆவது திருத்தச்சட்டத்தை ஓர் ஓட்டைப் பாத்திரம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபையின் அதிகார வரையறை எது என்பது முதல்வர் விக்னேஸ்வரனுக்குத் தெரியாததல்ல. அதனால் தான், அவர் இந்த விடயத்தை கடுந்தொனியில் கூறாமல் விட்டிருந்தார்.

குறிப்பாக, வடக்கில் தமிழ் பேசும் பொலிஸாரைக் கொண்ட படைப்பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், வடக்கில் இருந்து இராணுவத்தினர் விலக்கப்பட்டு இராணுவத் தலையீடுகளற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதில் காட்டிய கடுந்தொனியை அவர் ஆளுநர் விடயத்தில் காட்டவில்லை.

ஆனால், இராணுவ ஆளுநரை ஏற்பதில்லை என்று உறுதிப்பாட்டில், முதல்வர் விக்னேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருந்ததால் தான், ஆளுநர் முன்பாக பதவியேற்பதையும் தவிர்த்திருந்தனர்.

ஆளுநரை நீக்கும் விடயத்தில் முதல்வர் விக்னேஸ்வரன் கடும்



போக்கை வெளிப்படுத்த தயங்குவதற்கு காரணம், ஆளுநரை நியமிக்கும் அதிகாரங்கள் ஜனாதிபதிக்கே உரியவையாகும்.

யாரை ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி விரும்புகிறாரோ அவரை நியமிக்கலாம். அதுபோலவே ஆளுநரை நீக்கும் விடயத்திலும் அவரே தன்னிச்சையாக முடிவெடுக்கலாம். மத்திய அரசில் ஜனாதிபதி எந்தளவுக்கு நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ளாரோ, அதுபோலவே மாகாணங்களில் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர், ஒரு சிற்றரசர் போலவே செயற்படுகிறார்.

இதில் மாகாணசபைகளின் விருப்பு வெறுப்புகள் குறித்தெல்லாம் கவனிக்கப்படுவதில்லை.வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் தான் அங்கு ஆளுநர் விவகாரம் வெடித்தது. அதற்கு முன்னதாகவே, கிழக்கிலும் அத்தகைய பிரச்சினை தோன்றி விட்டது. இந்தளவுக்கும், அங்கே ஆளும் கட்சியாக இருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தான்.

அங்குள்ள ஆளுநரும் ஓர் இராணுவப் பின்னணி கொண்டவர் தான்.கடற்படைத் தலைமை அதிகாரியாக இருந்த வைஸ் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம, அங்கு மாகாணசபையின் எல்லா நடவடிக்கைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாக ஆளும் தரப்பினரே குற்றம் சாட்டுகின்றனர்.கிழக்கில் ஒரு மாகாண சபை செயற்படுகிறது என்றே கருத முடியாதளவுக்கு ஆளுநரின் தலையீடுகள் அங்கு காணப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது.

இதுபோன்று சூழல் வடக்கில் இன்னமும் ஏற்படவில்லை. ஏனென்றால், இப்போது தான் வடக்கு மாகாணசபை செயற்படத் தொடங்கியுள்ளது.ஆனால், கிழக்கினை ஒத்தநிலை விரைவிலேயே வடக்கிலும் ஏற்படலாம்.

எனினும் ஒரு சிக்கல் உள்ளது. வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகளில் அளவுக்கதிகமாக குறுக்கிடுவாரேயானால், தனது அதிகாரத்தனத்தை வெளிப்படுத்துவாரேயானால், அது சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்துக்கு கெட்டபெயரை ஏற்படுத்திக் கொடுக்கும்.எனவே கிழக்கில் ஆளுநர் செயற்படுவதை விட, வடக்கு ஆளுநர் அதிகாரப்போக்குடன் செயற்படுவதற்கு கொஞ்சம் தயங்கக்கூடும்.

வடக்கு மாகாணசபையின் சுதந்திரமான சிவில் நிர்வாகத்துக்கு இராணுவ ஆளுநர் தடையாக இருப்பார் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது கருத்தை அரசாங்கம் ஏற்குமா என்பது தான் முக்கியமான கேள்வி.முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இந்தக் கோரிக்கைக்கு ஊடகங்களில் பதிலளித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர், தாம் ஜனாதிபதியின் பிரதிநிதி என்றும், தம்மை நீக்கும்படி கோரும் உரிமை முதலமைச்சருக்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆளுநரை நீக்கும்படி கோரும் சட்டரீதியான உரிமை முதலமைச்சர் ஒருவருக்கு இல்லை என்பது உண்மையே என்றாலும், மாகாண அரசுடன் இணங்கிச் செயற்படும் ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டியது ஜனாதிபதியின் கடமையாகும். ஏனென்றால், அத்தகைய இணக்கப் போக்கைக் கொண்டிராதவரை நியமிப்பதால், மாகாணசபையின் செயற்பாடுகள் முடங்கி விடும். இந்தியாவில் பெரும்பாலும் மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளும் ஒருவரையே மத்திய அரசு ஆளுநராக நியமிப்பது வழக்கம்.

மத்திய ஆட்சியை சார்ந்தவர்களாக இருக்கும் அவ்வாறான ஆளுநர்கள் மாநிலங்களில் எதிர்க் கட்சிகள் ஆட்சியில் இருந்தாலும், விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ளும் போக்கையே பெரும்பாலும் கடைப்பிடிப்பதுண்டு.உதாரணத்துக்கு, தற்போது தமிழ்நாட்டில் உள்ள அதிமுக அரசுக்கும், மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசுக்கும் பெரிய இடைவெளி இருந்தாலும், தமிழ்நாட்டின் ஆளுநராக இருக்கும் காங்கிரஸின் மூத்த பிரமுகரான ரோசையா மாநில நிர்வாகத்தில் அதிகம் தலையிடுவதில்லை.

ஆனால், வேறு சில மாநிலங்களில் ஆளுநர் அளவுக்கு மீறி செயற்படுவதான குற்றச்சாட்டுகளும் உள்ளன. தமிழ்நாட்டில் அதிமுக அரசுடன் இணங்கிச் செயற்படும் ஆளுநர் போன்ற ஒருவரையே வடக்கு மாகாண சபை விரும்புகிறது. கிழக்கும் கூட அதற்கு விதிவிலக்கானதாக இருக்க முடியாது.

வடக்கு மாகாணசபையின் இந்தக் கோரிக்கையை ஐதேகவும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இதனைப் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாய்திறக்கவேயில்லை.

பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத்தகைய கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுக்கவில்லை என்று கூறியிருந்தார்.இந்த விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்த முடிவையும் எடுக்காமல் இழுத்தடிப்பாரேயானால், அது ஆளுநருக்கும் வடக்கு மாகாணசபைக்கும் இடையிலான இடைவெளிகளை அதிகப்படுத்தும்.

சிலவேளைகளில், முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநரை கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று உடனடியாக நீக்கி விட்டார் என்ற குற்றச்சாட்டு தெற்கிலிருந்து வருவதைத் தவிர்ப்பதற்காக, அவர் சிறிதுகாலம் அமைதி காக்கலாம்.வடக்கு மாகாணசபையை அரசாங்கம், அபிவிருத்தி நோக்கியும் நல்லிணக்கப் போக்குடனும் அணுகப்போகிறதா என்பதை, ஆளுநர் விவகாரமே தீர்மானிக்கப் போகிறது.

வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்தோ, இராணுவத்தை விலக்குவது குறித்தோ முடிவெடுக்க ஜனாதிபதி கூடுதல் அவகாசத்தை எடுக்கலாம். ஏனென்றால், அதில் அதிகமான சிக்கல்களை தாண்ட வேண்டும் என்று அவர் நியாயப்படுத்தலாம்.ஆனால், ஆளுநர் விவகாரம் அப்படியன்று. அது ஒரு சாதாரண விடயம்.

அதைச் செய்வதற்கு அதிகம் யோசிக்கவோ, எவருடைய அனுமதியையும் பெறவோ வேண்டியதில்லை. அதற்கான தற்துணிவு ஜனாதிபதியிடமே உள்ளது.இதையும் மீறி, வடக்கில் இருந்து இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநரை மாற்ற முடியாது என்று அரசாங்கம் கடும் பிடிவாதத்தில் இருக்குமேயானால், அது வடக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை என்ற சமிக்ஞையைத் தான் வெளியுலகிற்கு வெளிப்படுத்தும்.



கே.சஞ்சயன்

(நன்றி தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடைதிறந்த வெள்ளமாக 'மடை'

## கிராமியக் கலைப் பெருவிழா

திருகோணமலை உப்பு வெளி தபோவனத்தில் ஒக்டோபர் 25,26,27 ஆகிய மூன்று நாட்கள் "மடை என்னும் பாரம்பரிய கலை விழா" பாரம்பரிய கலைஞர்கள் சந்திப்பும்: ஆற்றுகையும்: காட்சிப்ப டுத்தலும்: என்னும் தொனியில் நடை பெற்றது.இந் நிகழ்வு கலைஞர்களுக் கிடையிலான அனுபவப் பகிர்வா கவும் கலைகளின் கொண்டாட்டத் திற்கு மான நிகழ்வாக அமைந்தது. இந்து சமயக் கலாசார



அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலாநிதி சி.ஜெயசங்கரின் எண்ணக்கரு கருத்திய லுடன் அவரது குழுவினர் இவ் நிகழ்வி ற்கான ஒழுங்குபடுத்தலை செய்திரு ந்தனர். பிரதம அதிதியாக பேராசிரியர் நஜு"முதீன் (திருவன்னாபுரம் பல்கலைக்கழகம்,தமிழ் நாடு) கலந்து கொண்டிருந்தார்.

பல்தன்மைப் பண்பாட்டினைக் கொண்ட நம் சமூகங்கள் தங்களுடைய பாரம்பரியக் கலைகளின் அவசியத்தினை உணர்தலும் அதேவேளை ஏனைய சமூகங்களின் பாரம்பரிய கலைகளை மக்களின் வாழ்வியலைப் புரிதலும் அவசியமானவை. இவ்வகையில் மடை என்னும் பாரம்பரிய கலைவிழாவானது பல பகுதிகளிருக்கும் கலைஞர்களை ஒரு இடத்தில் இணைக்கவும் அவர்களிடையே தொடர்பினை ஏற்படுத்தவும் அதேவேளை ஒரே இடத்தில் பல் தன்மை கொண்ட பல் பிரதேசக் கலைகளை பார்ப்பதற்குரிய சூழலை ஏற்படுத்தித் தந்தது.

மலையகத்திலிருந்து காமன் கூத்து, மன்னாரி லிருந்து மன்னார் மாலை, மட்டக்களப் பிலிருந்து மகுடி, கபறிஞ்ஞா, பறை மேளம், முல்லைத்தீவிலிருந்துகோவலன் கூத்தும் ஒப்பாரியும் திருகோணமலையிலிருந்து சிலம்பாட்டம், இறைக்காமத்தி லிருந்து களிகம்பு, உடப்பிலிருந்து இசைநிழ்வும் யாழ்ப்பாணத்திலிருந்து பப்பிரவாகன் கூத்து வன்னியிலிருந்து பறைமேளக் கூத்துப் போன்ற ஆற்றுகைகளும் இடம் பெற்றன.

அத்தோடு அருந்ததியர், பறங்கியர், இஸ்லாமியர் போன்ற சமூகங்களின் கலை ஆற்றுகைகளும் இடம்பெற்றன. இவற்றோடு மட்டக்களப்பு மடாலய அமைப்புக்களின் மாதிரியும் அங்கு நடைபெறும் சடங்கு நிகழ்த்துதல்களின் மாதிரியும் வேடர்சமூகத்தில் செய்யப்படும் சடங்கு நிகழ்த்துதல்களும் நிகழ்த்தப்பட்டன.

தோரண வடிவமைப்பும் இவற்றோடு இணைந்த கூத்து உடை

**கி. கலைமகள்**

அலங்காரப் பொருட்கள் தோரண அலங்காரம் போன்ற பாரம்பரிய பயன்பாட்டுப் பொருட்களை உள்ளடக்கிய காட்சிக் கூடம் அமைக்கப்பபட்டிருந்தது. இக்காட்சிக் கூடம் பாரம்பரிய வீட்டலங்கார முறைகளாக சாதாரணமாக நாம் பயன்படுத்தி வந்த ஆனால் இன்றைய சூழலில் நம்பயன்பாட்டிலிருந்து மறையும் தன்மை பொருந்தியதாக மாற்றப்பட்டு வரும் பொருட்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. இக்காட்சிக் கூடம் நம் பாரம்பரிய வாழ்தலை ஞாபகப்படுத்துவதாகவும் அதன் பயன்பாட்டின் தேவையினைச் சொல்வதாகவும் அமைந்திருந்தது.சமூகங்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்வதற்காய் சடங்குகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், கலைவெளிப்பாடுகள் போன்றவற்றினை நிகழ்த்தி வருகின்றன. இவை நம்பிக்கை சார்ந்ததாக வாழ்வியல் சார்ந்ததாக உள்ளன.

தொடர்ந்து தன் வழக்காறுகளை நிகழ்த்துவதன் ஊடாக பாரம்பரிய அறிவியல் முறைகளை, மக்கள் வரலாற்றினை ஞாபகப்படுத்தியும் அடுத்த தலைமுறைக்கு கையளித்தும் வருகின்றன. இவை சமூகத்தின் இருப்பினை சுயமான வாழ்தலை தக்கவைக்கின்றன. சமூகம் சார்ந்ததாய் மக்களை இணைப்பதற்குரிய வழியாகப் பயன்பத்தி வருகின்றன. இத்தகைய தன்மை கொண்ட



வழக்காறுகள் மனிதர்கள் சுயமாக இயங்குதற்கும் அழகியல் உணவுர் நிலையை வெளிப் படுத்து வதற்குரிய தளத்தினை சமூகத் திற்கு ஏற்படுத்தி கொடுக்கின்றன. இவ்வெளி சமூகம் தனக்காய் தானே உருவாக்கிய வெளியாகும். மனிதர்களை ஒன்றாய் இணைப்பதற்கும் தங்களுக்குள் வரும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கும் பிற சமூகங்களுடன் உறவினைப் பேணவும் ஏற்படுத்திக் கொண்டவை.

தொடரும்...............

# எத்தனை காலம் தான்......?

கலாவெவ ஒரு பின்தங்கிய பிரதேசமாக இருந்தாலும் அங்கு பல கடை த்தொகுதிகள் இருந்தன. அது ஒரு பெரிய வியாபார நிலையம் இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடத்தின் மேல்மாடி அக் குடும்பத்தினரின் வீடாகவும் கீழ்த்தளம் கடையாகவும் உபயோகிக்கப்பட்டது.

அக்கட்டிடத்தின் உரிமையாளர் பரம் பரை பரம்பரையாக அப் பிரதேசத்தில் பெரும் வியாபாரி அவரின் தகப்பனார் அவரை படிப்பிக்காததின் காரணமாக வியாபாரத் துறையில் நீடித்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் தனது இரு பிள்ளைகளையும் எப்படியா வது படிப்பித்து நல்ல உத்தியோகத்தை பெற்றுக் கொடுப்பதே அவரின் இலட்சியம்.

அப்பிரதேசத்தில் சிறந்த பாடசாலைகள் இன்மையால் தனது பிள்ளைகளை தலைநகருக்கு அனுப்பி படிப்பிக்க உத்தேசித்திருந்தார். ஆனால் தனது இரு பிள்ளைகளையும் அந்த உத்தேசத்தை கடை உரிமையாளர் மாற்றிக்கொண்டார்.

ஆனால் தம் பிள்ளைகளின் கல்வி விடயத்தில் மிகவும் அக்கரையுகாட்ட அவர் தவறவில்லை. வீட்டுக்கு பிரத்தி யேகமாக ஒரு ஆசிரி யரை அழைத்து மேலதிக வகுப்புக்களை நடாத்த வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். கலாவெவ பிரதேசத்தில் நல்ல ஆசிரியர் ஒருவரை தேர்தெடுப்பது கஷ்டம் என்ப தால் பளுகஸ் வெவ பகுதியில் இருந்து ஒரு ஆசிரியரை தேர்ந்தெடுத்திருந்தார்.

அந்த ஆசிரியர் பளுகஸ்வெவ பாடசாலை ஒன்றின் அதிபராக கடமையாற்றும் ஒருவர் அதுமாத்திரமல்ல சகல பாடங்களையும் கற்பிப்பதில் மிகவும் வல்லவராக இருந்தார். அதனால் கூடிய கட்டணத்தை அவருக்கு வழங்க கடை உரிமையாளர் தவறவில்லை அது மாத்திரமல்ல மாடியில் பிள்ளைகள் வசதியாக படிப்பதற்கு சகல வசதிகளையும் ஏற்பாடு செய்திருந்தார். அந்த ஆசிரியர் என்றுமே கடமை தவறாதவர். ஒவ்வொரு நாளும் பி.ப6.00 தொடக்கம் பி.ப 8.00 மணிவரை உரிமையாளரின் பிள்ளைகள் இருபேருக்கும் பாடங்களை நடத்துவார். மேலும் பிள்ளைகள் வெளிநாடு சென்று கை நிறை சம்பாதிக்க உயர் கல்வி தேவை என்பதையும் கடை உரிமையாளரிடம்அறிந்து கொள்ளத்தவறவில்லை.நித்தமும் வியாபார நடவடிக்கை களில் தனது சிந்தனையை செலுத்தியதா ல் மனைவி, பிள்ளைகள், ஆகியோருடன் அன்பாக பேசிப்பழக அவருக்கு அறவே நேரம் கிடைக்கவில்லை கீழ் தளத்தில் கடையுடன் சகல வசதிகளும் இருந்தால் அவர் மேல்மாடிக்குச் செல்லும் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

குடும்பத்தாரின் உதவிக்காக வேலைக்காரப்பையன் ஒருவரை அமர்த்தி யிருந்தார். அவர்கள் வெளியில் சென்று வர பிறம்பாக வாகனம் ஒன்றையும் ஒதுக்கி இருந்தார். சுருக்க மாக கூறப் போனால் அவரின் குடும்ப த்தார் கவலைப்படும் அளவுக்கு எந்த வொரு குறைகளையும் அவர்கள் தாங்கிக் கொள்ள இடமளிக்கவில்லை பொருள் கொள்வனவு விற்பனை, நுகர்வோரின் தேவை ஊழியர்களின் தேவைக்கிணங்க ஏனைய சகல நடவடிக் கைகளுக்கும் அவர்முகம்கொடுத்துக் கொண்டிருப்பதால் குடும்பத்தாரை நேரில் சந்தித்து கலந்து பேச வாய்ப்பு அமைந்து இருக்கவில்லை.

மேலும் அங்குள்ள ஊழியர்களை அவர் திறன்பட நடாத்தி வந்தார். அவர் கள்தான் வியாபாரத்தின் அச்சாணி என்பதை தனது தந்தையாரிடம் இருந்து அவர் கற்றுக் கொண்ட முக்கிய பாடமாகும் எப்பொழுதும் ஊழியர்களை அனு சரித்து நடந்து வந்ததால் ஊழியர்கள் அனைவரும் நிர்வாகத்திற்கு மிகவும் விசுவாசமாக நடந்துகொண்டனர்.

வேலைப்பாடு அதிகரிக்க, அதிகரி க்க மேல் மாடியில் தனக்கொரு குடும்ப மொன்று இருப்பதைக் கூட அவர் மறந்து செயல்பட ஆரம்பித்தார். குடும்பத்தில் பிர ச்சினைகளும் எதுவும் இருக்கவில்லை ஆனால் ஒரு நாள் அவரின் பிள்ளைகள் இருவரும் தேம்பி, தேம்பி அழுது கொண் டு கீழ் தளத்திற்கு வந்து ஏதோவொரு பிரச்சினையைப் பற்றி கூறிக்கொண்டி ருந்தார்கள்.

கடையில் நுகர்வோர் அதிகமாகக் காணப்பட்டதால் உரிமையாளர் தனது அறைக்கு பிள்ளைகளை கூட்டிச் சென்று அங்கு நடந்ததை மிக விளக்கமாக அறி ந்து கொண்டார். பிள்ளைகள் கூறியவற்றை கேட்டு உரிமையாளர் ஒரு சிலநிமிடம் ஊமையாகி விட்டார். மேலும் அங்கு நடந்ததை வெளியில்ஒருவருக்கும் கூற வேண்டாம் என்று பிள்ளைகளிடம் கேட்டுக் கொண்டார். சகலதும் பிரச்சினைகள் இன்றி நடந்து வருவதாக அவர் நம்பி இருந்தாலும் பிள்ளைகள் கூறியசம்பவத்தினால் அவர் இனிமேல் யாருக்காக வாழ வேண்டுமென்று வாழ்க்கையின் விளிம்புக்கே வந்த விட்டார்.எப்படியும் தன்னை ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு பிள்ளைகளுக்கு தென்பு ஊட்டினார். "நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் எதற்கும் அப்பா இருக்கிறேன்" என்று பிள்ளைகளுக்குதுணிச்சலைக்கொடுத்தார்.

பிள்ளைகளை எப்படியும் படிப்பித்து அவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டுமென்ற அவரின் இலட்சியம் குடும்பத்தில் வீசிய சூறாவளியினால் சுக்கு நூறாக போய்விடுமோ என்று சற்று மனம் தளர்ந்து கொண்டார் ஒரு மன அமைதிக்காக பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஒரு வாரம் அனுராதபுரத் திலுள்ள சகல வணக்க ஸ்தளத்திற்கு சென்று வழிப்பட்டார்.

**...நாட்டு நடப்பு...**

அவர் பௌத்த மதத்தை சார்ந்தவர் என்பதால் மன அமைதியை ஏற்படுத்திக் கொள்ள அவருக்கு வேறு மார்க்கங்கள் கண்களுக்குத் தென்படவில்லை. ஓரிரு வருடங்கள் கழிந்தன எப்படியும் அவருக்கு பிள்ளைகளின் எதிர்காலம் முக்கியம் என்பது தெரியாததல்ல அதற்காக ஒரு துணைவியை புதிதாக தேர்ந்தெடுக்க அவர் நிற்பந்திக்கப்பட்டார். பிள்ளைகளும் தமது சிந்தனையை மிக மிகவும் [illegible]மாக இருந்தனர். கடை உரிமையாளர் கூட தான் முதல் விட்டத் தவறை மீண்டும் புரியக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தார்.

உரிமையாளர், தனது இரண்டாவது மனைவி மேல் மிகவும் கரிசனையோடு நடக்க ஆரம்பித்தார். அதன் விளைவாக அவர் மூன்றாவது குழந்தைக்கு தகப்பனானார் முதலாவது மனைவியின் பிள்ளைகள் புதிய சகோரரனுடன் மிக விருப்பமாக இருந்தனர். இருப்பினும் அவர்களது சொந்த தாய் பாசத்தை அவர்களால் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

தங்களது தாயார் தற்பொழுது மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதை அவர்கள் எப்படியோ அறிந்து கொண்டனர். அம்மாவை மன்னித்து அவருக்கு உதவி செய்யும்படிதகப்பனை கெஞ்சினர்.எது என்னவாக இருந்தாலும் பிள்ளைகளின் பேச்சுக்கு மறு பேச்சு பேச மன மில்லாமல் தகப்பன் அவரின் முதல் மனைவி தற்பொழுது வசிக்கும் பளுகஸ் வெவ பகுதியில் மிக பெரிய வீடொன்றை விலைக்கு வேண்டி தாயுடன் பிள்ளைகள் இருவரும் சேர்ந்து வாழ ஏற்பாடு செய்திருந்தார்.

பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வந்த ஆசிரியருடன் தகாத உறவை ஏற்படுத்தி, அன்பான கணவனையும், பாசமான பிள்ளைகளையும், அர்த்த இராத்திரியில் கைவிட்டு ஆசிரியருடன் குடும்பம் நடாத்த அவரின் ஊரான பளுகஸ்வெவவுக்கு திருட்டுத்தனமாக சென்றவரே அந்த பிள்ளைகளின் தாயார். அவர் இன்று கஷ்டத்திற்கு உள் ளாகி இருப்பதற்கு காரணம் அவரின் கள்ளக் காதலன் இன்றுஉயிருடன் இல்லை. அவர் வீதி விபத்தொன்றில் அகால மரணம் அடைந்து விட்டார். இருப்பினும் அவரின் காதல் பரிசாக அந்த வீட்டில் ஓர் ஆண் குழந்தையின் மழலை கேட்டுக் கொண்டே இருக்கின்றது.

மறப்பது மனிதத்தன்மை, மன்னிப்பது தெய்வத் தன்மை, பழிவாங்குவது மிருகத்தன்மை என்பதை நன்கு புரிந்து கொண்ட கடை உரிமையாளர் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடியோடு மறந்துவிட்டார்.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் மனிதர்கள்

உம்மா உம்மா சாலிகா ராத்தா கூப்பிர்ராங்க போய் என்ன என்று கேளுமா? இந்தாங்க இதை நீங்களும் உங்கள் தம்பியும் சாப்பிடுங்க சசி என ஓட்டமும் நடையுமாக வந்தாள். அபி உம்மா இந்தாங்க சாலிகா ராத்தா தந்தாங்க என்னம்மா அது என்னதான் என்று பார்ப்போம் அது அபி சோறுமா இதுதான் புறியானிச் சோறு மகள் அபி தம்பி அப்துள்ளாவை கூப்பிடுமா இரண்டு பேரும் கையை கலுவி வாருங்கள் சோறு தருகின்றேன். அபி தம்பியையும் அழைத்து வா! நமக்கு புறியானிச் சோறு தந்தாங்க சாலிகா ராத்தா அப்படி என்ன ராத்தா? எனக்கும் தெரியாது வா சாப்பிட்டு பார்ப்போம். தாய் அந்த சோற்றை இரு பிள்ளைகளுக்கும் கொடுத்து விட்டு அவளும் ஆசைக்கு ஒரு வாய்ச் சோற்றை வாய்க்குள் போட்டு விட்டு இப்படிச் சோறு எல்லாம் சாப்பிட்டு எத்தனை மாதங்களாகின்றது. எனதன் மனதுக்குள் நொந்து கொண்டார். அபியின் தாய், ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினாள். தான் நல்ல முறையிலே தன் கணவனோடு வாழ்ந்த வாழ்க்கை நடாத்தியதையும் அவள் சந்தோஷமாக இருந்ததையும் மீட்டிப் பார்க்கிறாள். தன் கணவன் வியாபாரம் செய்து வரும் காலம் எத் தனை ஆடைகள் அது மாத்திரம் அல்ல உணவு வகைதான் எப்படிஎயல்லாம் சாப்பிட்டோம் அதை நினைத்துப் பூரித்துப் போனாள். அவள் நினைவுகள் பழைய வற்றை நினைத்து திரும்ப சற்று நிமிட ங்கள் சென்றன.

உம்மா உம்மா நாங்க சாப்பிட் டோம் தம்பி விளையாடப் போகின்றா னாம் என தாயின் பதிலை எதிர்பார்த் தனர். அப்போதுதான் அவள் சுய நினைவுக்குத் திரும்பினாள். உம்மா உம்மா என்னமா அபி எங்களுக்கும் இப்படி சோறு சமைத்து தருவிங்களா இந்த சோறு நல்லா இருக்கு நொந்து போனாள், இன்ஷா அல்லா என்று கூறி இரு ஜீவன்களையும் சமாதானப் படுத்தினாள்.

தன் கணவர் பாழாய்ப்போன இந்த புற்று நோயால் அவதிப்படுவதையும் நினைத்து வேதணை அடைந்தாள் அவள் என்ன செய்வாள் அவளும் ஒரு பெண்தானே ஊரிலே அவர்களுக்கு சிறு சிறு உதவிகள் செய்து கொடுப்பார்கள். அதை வைத்துத்தான் இரு ஜீவன்களும் தானும் தன் கணவரும் தேவைகளை பூர்த்தி செய்து வந்தாள். அபியின் தாய் அவள் அடிக்கடி கேட்கும் துவா! யா அல்லாஹ் நீ மிக தூய்மையானவன், அருளாளன், அன்பாளன் அல்லா எனது கணவணின் நோயைக் குறைத்து குணப்படுத்து என் கணவனைப் போல் வேதனை அடையும் நோயாளிகளை இந்த நோயிலிருந்து காப்பாற்று என இரு கரம் ஏந்தியவளாக கண்ணீர் மல்க துவா பிரார்த்தணை செய்தாள்.நாட்கள் மாதங்களாகவும் மாதங்கள் வருடமாகவும் காட்சி தந்தது அபி வளர்ந்து பெரிய பிள்ளையாகி விட்டாள். இப்போது அவள் வயது 11 தாண்டியது அவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரிதான் அவள் பாதியிலேயே படிப்பை தொடர முடியாமல் போய் விட்டது. காரணம் அவள் வறுமைதான் அபி தாய்க்கு சிறு சிறு உதவிகள் செய்து கொடுப்பாள். அவள் தாயும் தன் இரு பிள்ளைகளோடு உயிரையே வைத்து இருந்தாள். அபியின் நல்ல குணம் மரியாதை இது வெல்லாம் அங்கு இருக்கும்.

மஸ்கூர் போடியாரின் மகனுக்கு பிடித்தது அவன் சுகம் விசாரிக்க வரு வான். அவர்களுக்கு சில உதவிகள் செய்தும் கொடுப்பான். இப்படி ஒரு வருடம் கழிந்து அபியின் வாப்பா நற் சுகத்தோடு வீடு வந்து சேர்ந்தார். அப்போது அபியின் குடும்பம் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார். இறைவனுக்கு நன்றி கூறியவளாக "அல்லகம்துலில்லா" எல்லாப் புகழும் இறைவனுக்கே எல்லாம் அவன் வசம் திருப்தி கொண்டாள். தன் மகளின் நினைவை நினைத்துப் பார்க்கிறாள் அபியின் தாய் தன் மகளையாருர் திருமணம் செய்யப் போகிறார்கள். என்னிடம் ஒன்று ம் இல்லையே இந்த ஓலைக்குடிசையை த்தவிர அவள் உள்ளம் அலை மோதிக் கொண்டது. தன் மகளுக்காக இறை வனிடம் கேட்காத நாட்கள் இல்லை அன்றும் வளமைபோல அசர் தொழுகை நிறை வேற்றியவளாக தன் இரு கரங்களையும் ஏந்தி இறைவா நீயே எங்களை படைத்து கண்காணிக்கிறாய் நீயே உணவு அளிக்கிறாய் அது போல் எனது மகளுக்கு ஒரு நல்ல வாழ்வை கொடு ஏன் தெரியுமா? என் கண்ணோடு என் மகளுக்கு ஒரு நல்ல மனிதனாக நீ கல்யாணம் செய்(யா அல்லா) பிராத்தனைசெய்து முடிந்ததும் தன் கணவனை அழைத்து இஞ்ச பாருங்க நம்ம பிள்ளைக்கு யாரையாவது கேட்டு போவோமா? என்ன சொல்லுகிறாய் நம்மிடம் என்ன இருக்கிறது. இப்போதல்லாம் சீதணம் கேட்கிறார்கள் நகை நட்டு, வீடு வாசல் இதற்கெல்லாம். நாம் எங்கே போவது இறைவனிடம் பாரத்தைப் போடு ஏன் தெரியுமா? ஏழைகளோடு இறைவன் பண்மடங்கு இரக்கம் காட்டுவான். என அபியின் தந்தை தன் மனைவிக்கு ஆறுதல் கூறினார்.நாட்கள் சில சென்றன இவள் தாயின் துவா அங்கீகரிக்கப் பட்டதோ! என் னமோ தெரியல தங்கள் வீட்டிற்கு காரிலே யாரோ வந்து இறங்கினர். இவள் நினைவு என்ன தெரியுமா? வீடு தெரியாமல் வந்தார்களோ என்னவோ தனது குப்பி விளக்கை வெளியிலே கொண்டு வந்தாள். அபி அபி கொஞ்சம் வெளிலே வாம்மா யாரோ நம் வீட்டுப்



பக்கம் வாராங்க ஆமா! உம்மா மஸ்கூர் போடியாரின் குடும்பம்தான் என்ற அல்லாவே! இங்கேயே வாராங்க ஓடிப் போய் பாயை எடு ஓடிவா அவள் பாயோடு வெளியில் வந்ததும் அவர்களுக்கு அவள் தாய் அஸ்ஸலாகு அலைக்கும். அவர்களும் அதற்கு பதில் உரைத்தார்கள். வாங்க வாங்க இருங்கம்மா இங்கே கதிரையல்லாம் இல்ல பாயில உட்காருங்கோ சரி இப்ப எப்படி அபியின் வாப்பாவை சுகம் கேட்டார்கள் இப்போது அல்லாவின் உதவியால் நல்ல சுகம் "நாங்க வந்தது ஏன் தெரியுமா! என்னமா இப்படி கேக்கிறிங்க எங்கிட்ட என்ன இருக்கு அப்படி சொ ல்லாதீங்க.நாங்க உங்க மகளை எங்கள் மகனுக்கு திருமணம் செய்யாலாம் என நினைக்கின்றோம். இதை காதில் கேட்ட அபிக்கு தலைசுற்றுவது போல் இருந்தது. அபியின் தாயிக்கு வார்த்தை வெளியே வரவில்லை, அப்படியே அமைதியானால். இதையல்லம் பார்த்துக் கொண்டிருந்த மஸ்கூர் போடியாரின் குடும்பம் என்ன? ஒன்றுமே பேசாமா இருக்கிங்க அப்போதுதான் அவள் நினைவுக்கு வந்தாள். தான் காண்பது கணவா அல்லது நினைவா? என்னம்மா இந்தக் கேள்வியை கேட்டிங்க என்று அபியின் தந்தை எங்களிடம் வந்து சம்பந்தம் செய்றிங்க எல்லாம் தெரிந்து தான் நாங்கள் வந்து இருக்கிறோம். நீங்கள் முடிவு தந்தா அடுத்த கிழமையே கல்யாணத்தை முடிக்க நாங்கள் இருக்கின்றோம். பெண்ண மட்டும் தந்தா போதும். வேறு எதிவுமே வேண்டாம் சரி நாங்க போய் வருகிறோம். என்னமா இருங்க தேத்தனியாவது குடிச்சிட்டு போங்க அபி அதற்குள் தேனீர் தட்டோடு வெளியே வந்தாள். அவளுக்கும் எங்கிருந்தோ நாணம், வெட்கம் வந்தது என தெரியல கொடுத்து விட்டு உள்ளே சென்று விட்டாள். அவர்களும் விடை பெற்று சென்று விட்டார்கள்.

அபியின் தாய் பார்த்தீர்களா இறைவன் எமக்கு காட்டிய வழியை நினைத்து பூரித்துப் போனார்கள் எங்கள் ஆசையை நிறைவேற்றிய இறைவனுக்கு நன்றி செலுத்தியவளாக தனது ஓலைக் குடிசைக்குள் செல்லுகிறாள்.

பார்த்தீர்களா இறைவன் எம்மோடு எப்போதும் அன்பு கருணை பாசம் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றான். மனிதனாகிய நாம் தான் இறைவனை துதிப்பதில் தாமதம் செய்கின்றோம்.

இப்படியும் நல்ல உள்ளம் படைத்த மனிதர்கள் உலகிலே இருக்கத்தான் செய்கிறார்கள்.

**M.N. சபீக்க**
**அக்கரைச் சேனை மூதூர்**

# அவளும் ஒரு பெண்தான்

மனாஸ் வயது 30 ஆகியும் இன்னும் திருமணம் செய்ய வில்லை. அவன் அந்த ஊரிலே நல்ல பையனாகவும் அழகானவனும், குணத்திலும் சிறந்து காணப்பட்டான். அவனுக்கு வாப்பா என்று சொல்ல லாக்கி இல்லையன்று தான் கூறவேண்டும். அவன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தன் அன்பு தந்தையை இழந்து விட்டான். "ஆமாம்" அவன் தந்தை மாரடைப்பு நோயாளர் தீடீர் மரணமானார். தன் தாயின் அரவணைப் பெற்று மாற்று திருமணம் செய்யாமல் கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்த்து தன் பிள்ளையை படிக்க வைத்து இன்று ஆபிசிலே பெரிய பதவிலே இருக்கிறான் என்றால் அது தாயால்தான் என்பது மிகையாகாது.

அவன் தாயின் மீது மிகுந்த அன்பு வைத்தான். சொல்லப் போனால் அவனுக்கு எல்லாமே தன் தாயிதான் தன் தாயிக்கு அவனே சில சில வேலைகளை செய்து கொடுத்து விட்டுத்தான் வேலைக்கு செல்வான். லீவு நேரம் வந்தாலும் தன் தாயோடு நேரத்தை செலவிடுவான். அவனை எல்லோரும் விரும்பினார்கள். மாப்பிள்ளையும் கேட்டே வந்தனர். அவனோ எதற்கும் முடிவு கொடுக்க வில்லை. இதனால் தாயிக்கும் வேதனைதான் தன் மகனை நினைத்து நாட்கள் நகர்ந்தது.

அதே ஆபிசிலேயே வேலை செய்யும் பெண் ஜகானை அவனுக்கு பிடித்து விட்டது. இதற்கு காரணம் அவளின் அமைதியான குணயில்பு, அழகு அவள் எளிமையான தோற்றம் இவையனைத்தும் அவனுக்கு மிகமிக பிடித்தவைதான் இதை யாரிடமும் சொல்ல வில்லை. அவள் யார் என்பதும் மனசுக்கு தெரியாது. அவன் தன் ஆபிசிலே வேலை செய்கிறாள் என்பது மட்டும் புரிந்தது அவனுக்கு.

அன்று வழமைப்போல் தன் மகனிடம் மனாஸ் என்ன உம்மா? நீ இப்படி இருந்த உணக்கிண்டு ஒருத்தி வேணாம்மா என் கண்ணுக்கு முன்னாடி ஒரு மருமக வேணாமா சொல்லுவாப்பா! அதற்கு என்ன அவசரம் உம்மா. எப்ப கேட்டாலும் இப்படித்தான் மகன் சொல்கிறா இன்ஷா அல்லா நடக்கும் திருமணம் என்று கூறிவிட்டான். அன்று வழமை போல் வேலை முடிந்து வீடு திரும்பும் போது எதிர் பாராமல் ஜகானை மனாஸ் சந்தித்தான் (எக்சூசிமி) நீங்க எங்க ஆபிசழலே வேலை செய்றீங்க எங்க இருந்து வேலைக்கு வாரிங்க நான் பக்கத்து ஊர் தான். நடந்தா போறிங்க ஆமா எனக்கு நடந்து போவது மிகவும் பிடிக்கும்.

நான் ஒன்று கேட்டா கோவிக்க மாட்டிங்களா? நான் உங்களை கல்யாணம் முடிக்கப் போறேன். ஜகானுக்கு தலை சுற்றுவது போல் இருந்தது. எல்லாமே ஒரே இருட்டாக அவளுக்கு தெரிந்தது. சற்று பின் நிதானத்தோடு நான் ஏற்கனவே திருமணம் செய்து விட்டேன். எனக்கு ஒரு பெண்பிள்ளை இருக்கிறது என் கணவர் சீதனக் கொடுமையால் அவரை தலாக் சொல்லி விட்டேன். பிள்ளையை படிக்க வைக்க வேனும் அது மாத்திரம் அல்ல என் வயதான தாயையும் நான் தான் கவனித்துக் கொள்கின்றேன். என்று கதையை கூறி முடிக்கும் முன் உங்க முகவரி தருவிங்களா? நான் தான் எல்லாவற்றையும் சொல்லி விட்டேன் இனி கேட்கும் போது ஒன்றும் செய்ய முடியாது இதோ என் முகவரி என ஜகானை கொடுத்து விட்டு வீடு நோக்கி நடக்கிறார்.

அடுத்த நாள் வேலைக்கு லீவு போட்டான் மனால் அவள் ஜகானுக்கும் மனம் சரி இல்லைப் போலும் அவளும் அன்று லீவு கடிதம் கொடுத்து விட்டாள். மனாஸ் இன்று வழமைக்கு மாறா சந்தோசமாக இருந்தான். தாய் என்ன இன்று மகன் சந்தோஷமாக இருக்கின்றான். உம்மா, உம்மா என்னடா ம்னாஸ் ஏதும் விசேசமா ஆமா உம்மா அப்படி என்ன விசேசம் இல்லாமா நா வந்து கல்யாணம் முடிப்பதாக இருக்கிறேன். என்னடா புதுசா இருக்கு அமா உம்மா என்னுடைய ஆபிசிலே வேலை செய்யும் ஜகான் என்ற பெண்ணைத்தான் கல்யாணம் செய்யப் போகிறேன். யாருடைய பெண் சொல்லு மகனே அவ ஏற்கனவே திருமணம் செய்தவள். ஒரு பெண் பிள்ளையும் இருக்குது அவ புருசன் சீதனக்க கொடுமையாள விட்டு விட்டு போய் விட்டானாம்.

எல்லாவற்றையும் கேட்டுக்குட்டு இருந்த மனாசின் தாய் இப்பதாண்டா நீ என்னுடைய புள்ள அவளும் ஒரு பெண் தானே இப்படி ஒவ்வொரு ஆண் புள்ளங்க இருந்த விதவங்க எங்கே இருக்கப் போறாங்க அவங்கள் மதித்து அவங்களுக்குண்டு ஒருவர் முன் வந்தா ஏன்? வாப்பா ஊரிலே விதவப் பெண்னுன்டு ஒருத்தரும் இருக்க மாட்டாங்க மனாஸ் இப்போதுதான் என் மனசு நல்லா இருக்கின்றது. அல்லா உன் கல்யாணத்திற்கு உதவி செய்வான் மகனே நீ நல்லா இருக்கனும் இன்றே அவ வீட்டுக்கு போய் பெண் கேட்டு கல்யாணத்தை சட்டு புட்டுண்டு முடிக்க வேண்டும். என மனாசின் தாய் மளமாற வேண்டினாள் தன் திருமணத்தை

யாஅல்லாஹ் இப்படி ஒவ்வொரு ஆண் மகனும் முன் வந்து எல்லா விதவைப் பெண்களை திருமணம் செய்ய அருள் புரிய வேண்டும் என தூவா கேட்டவாறு தன் வேலையை கவனிக்க தொடங்கினாள் மனாசின் தாய்.



முற்றும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத முனையும்



எழுத முனையும்
வரிகளில் எல்லாம்
என்றோ........
அவலம் தாங்கி
அழுதவரின் குரல்...
மரணத்தின் நிறம்...
பிரிவின் பதைப்பு...
மயானத்தின் வெப்பம்...
இவை...
விழுங்க... விழுங்க
வரிகளை
எழுத முனைகிறது
என் பேனா...

யாரோ.......
என் எழுத்தைக்
காணச் சகியாமல்
பிடரியில் பொருத்து
கின்றனர்
சுடுகுழலை...

கட்டளை இடுகின்றனர்

சமாதானம் எழுதச்
சொல்லி....

மறுக்க முனையும்
தலை அசைவை
உணரும் சுடுகுழல்...
உடனே
விசையாகச்
சன்ன மொன்றைத்
தன் வாயருகே
ஏற்கும்......

சகிக்க முடியா - அக்
காக்கியுடைஞன்
கட்டளை இடுகிறான்.

சமாதானத்தை
எழுது.......
சமாதானத்தை மட்டுமே
எழுது......... என

அசைக்க முடியாத்
தலையுடன் - என்
வாசலின் அருகே
உற்றுப் பார்க்கிறேன்.

யமன்..........

இனமே
சொல்
அன்றோர் நாள்
யூலையின் பெரு
நெருப்பில் பொசுங்கிப் - பின்
முள்ளிவாய்க்காலிற் புதைந்த
என் இனமே

சொல்........

என் கோல்
சுதந்திரத்தை எழுதி
உடைந்து போகட்டுமா?
இன்றேல்
திணிக்கப்படும் சமாதானத்துடன்
தொடர்ந்து வாழட்டுமா?
சொல்.............**மாயன்**

## என் தோழி



அன்புக்கு இன்னொரு
தாய்
கண்டிப்புக்கு இன்னொரு
தந்தை
வழிகாட்டும் இன்னொரு
ஆசான்
வம்பிழுக்கும் இன்னொரு
சகோதரி
முகம் புதைக்க வந்த
தலையணை
வருடிச் செல்லும் இன்னொரு
தென்றல்
சரியாய் வழிநடத்தும்
வழிகாட்டி
நான் நடந்து செல்ல போடப்பட்ட
பாதை
என்னை சுமக்கும் இரண்டாம்
கருவறை
நான் மறைந்து கொள்ளும்
மறைவிடம்
நான் வாழ இன்னுமொரு
உறைவிடம்
என்னை உயிர்ப்பிக்கும்
சஞ்சீவினி
எனக்காக இறைவன்
படைத்த
இன்னுமொரு உலகமே
என் தோழி

**பு.மிருதுயாஷினி**
தரம் - 9
தி/மெதடிஸ் மகளிர் கல்லூரி

# தவிப் முரசு

## தொடரும் தவிப்புக்கள்

இந்த வாழ்க்கையை
சங்கடங்களின்றி
நடத்த முடியவில்லை
விடியலின் ஆதியிலும்
இரவின் அந்தத்திலும்
அவை மீண்டும் கொண்டுதான்
வருகின்றன

தேநீரில் இனிப்பு
குறையும் போதும்
சாயமிழந்த ஆடைகளை
அணியும் போதும்

நீரில்லா கழிவறையினுள்ளும்

பொருத்தமற்ற
உள்ளாடைகளோடும்

ஒழுங்காய் புணராத
குறிகள் நிறைந்த இரவினுள்ளும்

ஒவ்வொரு சோதனைச் சாவடியின்
அடையாள வகுப்பின் போதும்

சுற்றி வளைப்புக்குள்ளும்

சில வார்த்தைகளுடாக
சங்கடங்கள்
திரண்டு கொண்டுதான்
வருகின்றன

சில வேளைகளில்
பயங்கரமான சகஜமான
மௌனத்தினூடாக **'குறி இடல்'**

**தி.பவித்திரன்**

## அன்புள்ள அம்மா!



" பத்து மாதம்
சுமந்திருந்து
என்னைப் பெற்ற என்
அன்னை
என் உயிரை விடவும்
அன்பிற்குறியவர்! அவர் என்
கண் எதிரிலேயே
கொழுந்து விட்டெரியும்
நகர நெருப்பில் வீழ்ந்து
வேதனைப் படுவதைக்
காண, நான் ஒரு போதும்
சகிக்கமாட்டேன் அந்த
பயங்கர வேதனையிலிருந்து
என் அன்பே உருவான
அன்னையை மீட்டெடுப்பதுதான்
என் ஒரே எண்ணம்!"

**றிஸ்வான் பாத்திமா**
**ஹயா**

## வாழ்விடங்கள் அழியும்

பூக்களைப் பறிக்காதீர்கள்
அது தேனீர்களின் உணவகம்
மரங்களை வெட்டாதீர்
அது பறவைகளின் வதிவிடம்
காட்டை அழிக்காதீர்
அது விலங்குகளின் உறைவிடம்
ஆலயங்களை உடைக்காதீர்
அது ஆண்டவனின் இல்லம்.

**ஆ.சுஜீவினி**

# "தமிழ்ப்பாஷை" நூல் வெளியீடு

இந்நூல் எழுநா, நூலகம் ஆகியவற்றின் கூட்டுவெளியீடாக கடந்த 19.10.2013 இல் திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் "பகிர்வு" இலக்கியக் குழுமத்தின் "முற்றத்துச் சந்திப்பில்" வெளியிடப் பட்டது.

தமிழ்ப்பாஷை நூலுக்கு கலாநிதி செ.யோகராசா அவர்கள் வழங்கியிருக்கும் முன்னுரையின் சிறுபகுதி ..

தமிழ்ப்பாஷை என்ற இந்நூல் முக்கியமாகப் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது. தமிழ்ப்பாஷையின் பிறப்பு, தமிழ் என்ற பெயர் ஏற்பட்டமைக்கான காரணம், தமிழ்ச் சங்கங்கள் இருந்தனவா? தமிழ்ப் பாஷையில் இருக்கும் இலக்கியங்கள், சமகாலத் தமிழ் மொழியின் நிலை, சமகாலத் தமிழ்ப் புலவரின் நிலை, மொழி பெயர்ப்பின் முக்கியத்துவம், தமிழ் மொழிப் பற்றின் அவசியம்.

மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு நுணுகி நோக்குகின்ற போது தமிழ்மொழி, தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான முக்கியமான சில விடயங்கள் பற்றி இந்நூல் முதன் முதலாகப் பேச முற்படுவது புலப்படுபடுகின்றது. சுருங்கக்கூறின் ஈழத்தவரான தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் தமிழ்ப் பாஷை என்ற நூல் தமிழ்மொழி வரலாற்று உருவாக்கத்திலும், தமிழ் இலக்கிய வரலாற்று உருவாக்கத்திலும் முக்கியமான நூலாகும்.

கலாநிதி செ.யோகராசா மொழித்துறை கிழக்குப் பல்கலைக்கழகம் "தமிழ்ப்பாஷை" [illegible] 1892 இல் சென்னையில் இருந்து வெளிவந்த விவேக சிந்தாமணி என்ற பத்திரிகையில் தொடர் கட்டுரையாக வெளிவந்ததாகும்.


இதனுடன் அவரது மற்றைய படைப்புக்களான."தத்தைவிடு தூது" அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம் கோணை முத்துக்குமாரசுவாமி ஊஞ்சல் வாகை மாலைமுதலான பிரபந்தங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பாஷை தி.த.சரவண முத்துப்பிள்ளை இந்நூலின் ஆசிரியர் திரு.சரவணமுத்துப்பிள்ளை (1865 - 1902) இலங்கையின் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஈழத்து எழுத்தாளர், தமிழறிஞர்.

தமிழின் முதல் வரலாற்றுப் புதினமான மோகனாங்கி என்ற புதினத்தை 1895 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டவர். தனது பதினைந்தாவது வயதிலேயே சென்னை சென்று அங்கு சென்னை பச்சையப்பப்பன் கல்லூரியிலும், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் கல்வி கற்றிருந்தார்.

கனகசுந்தரம்பிள்ளையின் சகோதரரான இவர் தமது தமையனாரைப் போலவே தத்துவ சாஸ்திரத்தில் B.A பட்டம் பெற்று தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர். இவர் பாரதிக்கு முன்னோடியான "தத்தைவிடு தூது" என்ற பெண் விடுதலை செய்யுளையும் எழுதியவராவர்.

தமிழ்ப்பாஷை, தி.த. சரவணமுத்துப்பிள்ளை கடமைபுரிந்த சென்னை துரைத்தனப் பாடசாலைத் தமிழ்ச் சங்கத்தில் அன்னார் ஆற்றிய உரையின் நூல் வடிவமாகும்.இவர்1902 இல் தனது 37வது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.



தமிழ்ப்பாஷை - மறுபதிப்பு - 2013எழுநா, நூலகம் அகியவற்றின் கூட்டுவெளியீடாக கனடா சுஜன் சண்முகசிங்கம் அவர்களின் பொருளுதவியில் வெளிவந்திருக்கும் இந்நூல் சற்குணம் சத்தியதேவனால் பதிப்பிக்கப்பட்டது.

திருகோணமலையின் முக்கிய கலை , இலக்கியச் செயற்பாட்டாளரும், வரலாறு, மற்றும் வழக்காறுகள் குறித்து ஆழமான தேடலும், அக்கறையும் உள்ள திரு.சற்குணம் சத்தியதேவனது இம் முயற்சிபாராட்டுக்குரியது.

**"தமிழ்ப்பாஷை" நூல் வெளியீடு**

தி. பவித்திரன் நிகழ்வை தொடக்கி வைக்க, "தமிழ்ப்பாஷை" நூல் அறிமுகத்தை மு. மயூரன் அவர்கள் செய்ய, வெளியீடும் ஏற்பும் சத்யன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பியும் சில நினைவுகளும் என்ற தலைப்பில் யதீந்திரா அவர்களின் உரையும், பின்னர் திருகோணமலையின் பிரதேச இலக்கியப்போக்கு எனும் தலைப்பிலான கலந்துரையாடல் திருமலைநவம் அவர்களின் தொடக்க உரையுடன் நிகழ்ந்தது. பத்மபிரஷன் நிறைவுரை நிகழ்த்தினார்.

**- வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## ஆழ்ந்த யோசனையில் அமலா பால்



படங்களின் ஒப்பந்தம் குறித்து தீவிர யோசனையில் உள்ளாராம் அமலா பால். தலைவா படத்தில் விஜய்யுடன் நடித்த பிறகு கோடம்பாக்கத்தின் நம்பர் ஒன் நடிகை ஆகிவிடலாம் என்று கனவு கண்டார் அமலாபால்.

ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு தலைவா படம் ரீச் ஆகவில்லை. இதனால் ரொம்பவே அப்செட் ஆகிப் போனார். இப்போது தமிழில் இரண்டு படங்களில் மட்டுமே நடித்துக்கொண்டு இருக்கிறார்.

ஜெயம் ரவியுடன் நிமிர்ந்து நில் படத்திலும், தனுடன் வேலையில்லா பட்டதாரி படத்திலும் நடிக்கும் அமலாபால் அடுத்து என்ன செய்வது என்ற தீவிர யோசனையில் இருக்கிறாராம். இதுகுறித்து அவர் கூறுகையில், சினிமாவில் அதிகமான எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தைதான் கொடுக்கிறது என்பதால் நடிப்பது மட்டுமே என் வேலை. மற்றபடி வெற்றி தோல்வியை சகஜமாக எடுத்துக் கொள்வேன் என்று கூறியுள்ளார்.

## போனில் காதல் வளர்க்கும் சிம்பு

போனில் பேசிப் பேசி காதல் வளர்க்கப் போகிறாராம் சிம்பு. வாலு, வேட்டை மன்னன், இங்க என்ன சொல்லுது என பல படங்களில் நடித்து வருகிறார் சிம்பு. இவர் நடித்த போடா போடி படம் வெளியாகி கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிட்டது.

இந்நிலையில் தற்போது நடித்து வரும் படங்களில் அடுத்து எந்தப் படம் வெளியாகும் என்று தெரியவில்லை. இந்தப் படங்களுடன் அடுத்து பாண்டிராஜ் இயக்கும் ஒரு படத்திலும் நடித்து வருகிறார். இன்னும் பெயரிடப்படாத இந்தப் படத்தை சிம்புவே தயாரிக்க, சிம்புவின் தம்பி குறளரசன் இசையமைக்கிறார்.

இந்தப் படத்தில் சிம்பு எப்போதும் போனில் பேசிக்கொண்டிருப்பது மாதிரியான கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம். இப்படி போனில் பேசிப் பேசி அவரது காதலும் வளருமாம், இந்த தகவலை சிம்புவே டுவீட் செய்திருக்கிறார்.

## திக்கித் திணறிய ப்ரியா ஆனந்த்



யுவனின் இசையில் பாட முடியாமல் திக்கித் திணறிவிட்டாராம் ப்ரியா ஆனந்த். ஹீரோக்களை அடுத்து ஹீரோயின்களும் இப்போது பாடுவதில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

ரம்யா நம்பீசன் பாண்டிய நாடு படத்தில் பை பை பை கலாய்ச்சி வை பாடல் பாடினார்.அந்தப் பாடல் இப்போது எக்கச்சக்கமாக லைக்ஸ் வாங்கி ஹிட் அடித்திருக்கிறது.

பிந்துமாதவியும் இமானிடம் பாடுவதற்கு வாய்ப்பு கேட்டிருக்கிறார். மேலும் லட்சுமிமேனனும் தான் நடிக்கும் படங்களில் ஒரே ஒரு பாட்டாவது பாட வேண்டும் என்று ஆர்வமாக இருக்கிறாராம்.

இதே ஆசை ப்ரியா ஆனந்துக்கும் வந்ததாம். ஐஸ்வர்யா தனுஷ் இயக்கத்தில் வை ராஜா வை படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவிடம் தன் பாட்டுத் திறமை குறித்து அள்ளிவிட்டுள்ளார் ப்ரியா.

யுவனும் ஒரு பாடலைப் பாட வாய்ப்பு கொடுக்க, அதில் ரொம்பவே திணறிப் போய்விட்டாராம். பல டேக்குகள் வாங்கியும் சரியாகப் பாட முடியாததால், ஸ்டுடியோவிலிருந்து பாடாமலேயே வெளியே வந்துவிட்டாராம் ப்ரியா ஆனந்த்.

## ஊழலை ஒழிக்கும் ப்ரியங்கா சோப்ரா



நான் பிரதமரானால் ஊழலை ஒழிப்பேன் என்று கூறியுள்ளார் ப்ரியங்கா சோப்ரா.

பிரபல பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா. இவரின் தந்தை மதுசோப்ரா இந்திய ராணுவத்தின் மருத்துவ பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.


மது சோப்ரா புற்று நோய் பாதிப்பு காரணமாக சில மாதங்களுக்கு முன் இறந்தார். இந் நிலையில் புற்று நோய் பாதித்தவர்களுக்கு உதவுவதற்காக தன் தந்தையின் நினைவாக பிரியங்கா சோப்ரா அறக்கட்டளை துவக்கியுள்ளார்.

இந்த அறக்கட்டளை சார்பில் மும்பை புறநகர் பகுதியில் உள்ள நானாவதி மருத்துவமனையில் புற்று நோய்க்கான சிகிச்சை அளிக்கும் வார்டை கட்டுவதற்காக 50 லட்சம் ரூபாய் நன்கொடை அளித்துள்ளார். இதுகுறித்து ப்ரியங்கா கூறுகையில், என் தந்தையின் இழப்பு என்னை மிகவும் பாதித்து விட்டது. புற்றுநோயால் என் தந்தை எந்த அளவுக்கு அவதிப்பட்டார் என்பது எனக்கு தான் தெரியும்.

அதுபோன்ற நிலை வேறு யாருக்கும் ஏற்படக் கூடாது என்பதால் தான் புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக என்னால் முடிந்த அளவு உதவ முடிவு செய்துள்ளேன்.

அதன் முதல் கட்டமாகத்தான் இந்த நன்கொடையை அளித்துள்ளேன். மேலும் ஊழலுக்கு எதிரான விடயங்களிலும் ஆர்வம் காட்டி வருகிறேன் என்றும் நான் பிரதமரானால் நாட்டிலிருந்து ஊழலை அடியோடு ஒழிப்பேன் என்றும் கூறியுள்ளார்.

## ஹாலிவுட் வாய்ப்பிற்கு நோ சொன்ன தனுஷ்



தனக்கு பிரிட்டன், ஸ்பானிஷ் மற்றும் ஹாலிவுட் பட வாய்ப்புகள் வந்ததாக கூறியுள்ளார் தனுஷ். தமிழ் மட்டுமல்லாது இந்தி திரையுலகிலும் தனுஷிற்கு நடிக்க வாய்ப்புகள் குவிகிறது. ஆனால் படங்களை மிகவும் பொறுமையாக தெரிவு செய்து நடித்து வருகிறார்.

தற்போது தமிழில் வேலையில்லா பட்டதாரி, வெற்றிமாறன் இயக்கத்தில் அனேகன் மற்றும் இந்தியில் ஆனந்த் எல்.ராய் இயக்கும் அடுத்த படம் என வரிசையாக படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தனுஷ், தனக்கு ஹாலிவுட் வாய்ப்பு வந்ததாகவும் ஆனால் நடிக்க மறுத்துவிட்டதாகவும் கூறியுள்ளார். மேலும் பிரிட்டன், ஸ்பானிஷ் மற்றும் ஹாலிவுட் பட வாய்ப்புகள் வந்தது. படத்தின் முழுக்கதையையும் எனக்கு அனுப்பியிருந்தார்கள்.

ஆனால் அச்சமயத்தில் எனக்கு இங்கு படப்பணிகள் நிறைய இருந்ததால் நடிக்க முடியாமல் போய்விட்டது. இந்தி திரையுலகில் அறிமுகமாகும் போதும் சிரித்தார்கள், அதைப் போல ஹாலிவுட் என்றவுடனும் சிரிப்பார்கள், எனக்கே சிரிப்பு தான் வருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை எதுவும் சாத்தியம் தான், எதுவும் முடியாததல்ல. மேலும் நான் இயக்குனரானால் ரஜினி, சிவகார்த்திகேயன், அனிருத், கன்னட நடிகர் சிவராஜ்குமார் ஆகியோரை இயக்க ஆசை.

அனிருத்திற்கு நிறைய படவாய்ப்புகள் வந்து குவிகிறது. ஆனால் நான் தான் இப்போதைக்கு இசையில் மட்டுமே அவர் கவனம் செலுத்தவேண்டும் என பிடித்து வைத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

## ஹன்சிகாவின் சின்சியாரிட்டி

கடந்த சில நாட்களாக ஜுரத்தில் சிக்கியுள்ளாராம் ஹன்சிகா மோத்வானி. வாலு, வேட்டை மன்னன், அரண்மனை உள்ளிட்ட 8 தமிழ் படங்களில் நடித்து வருகிறார் ஹன்சிகா மோத்வானி. தற்போது அரண்மனை படப்பிடிப்பில் ஈடுபட்டுள்ள இவர் கடந்த சில நாட்களாக ஜுரத்தால் அவதிப்பட்டாலும் வரிசையாக படங்களை ஒப்புக்கொண்டிருப்பதால் ஓய்வு எடுக்க நேரம் இல்லாமல் தவிக்கிறாராம்.



அரண்மனை படத்தில் ஆண்ட்ரியா, லட்சுமிராய் என மேலும் 2 ஹீரோயின்கள் நடிப்பதால் அவர்களின் கால்ஷீட்டில் ஹன்சிகாவால் குழப்பம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் கையில் ஜுரத்துக்கான மாத்திரையை வைத்துக்கொண்டு படப்பிடிப்பில் நடித்து வருகிறார்.

இதுகுறித்து ஹன்சிகா கூறுகையில், ஜுரத்தால் கடும் அவதிப்பட்டு வருகிறேன். ஆனாலும் படப்பிடிப்பிலிருந்து ஓய்வு எடுக்க முடியாத நிலை உள்ளது. மேலும் கையில் ஜுர மாத்திரையுடன் நடித்தாலும், வேலையில் ஈடுபட்ட திருப்தி ஆறுதல் அளிக்கிறது என்று கூறியுள்ளார்.

## மீண்டும் பாலா-விஷால் கூட்டணி

விஷால் - பாலா கூட்டணி மீண்டும் இணையப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாலா இயக்கத்தில் விஷால், ஆர்யா இருவரும் இணைந்து நடித்த படம் அவன் இவன்.

விமர்சகர்கள் மத்தியில் படம் போதிய வரவேற்பை பெறவில்லை. ஆனால் அப்படத்தில் விஷாலின் நடிப்பிற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது.

அப்போதே, நான் பாலா இயக்கத்தில் மீண்டும் நடிக்கவிருக்கிறேன் என்று தெரிவித்திருந்தார் விஷால். ஆனால் எப்போது என்பது தெரியாமல் இருந்தது. இந்நிலையில் தற்போது திரு இயக்கவிருக்கும் படத்தில் நடிக்கவிருக்கும் விஷால் இப்படத்தினைத் தொடர்ந்து பாலா இயக்கத்தில் நடிக்கவிருக்கிறாராம்.

இதுகுறித்து விஷால் கூறுகையில், அடுத்தாண்டு தேதிகளை வைத்திருக்கும்படி பாலா தன்னிடம் கூறியதாகவும் விரைவில் பாலா தரப்பில் இருந்து முறையான அறிவிப்பு வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை ஆப்பிள் சாப்பிடுவதால் உண்டாகும் நன்மைகள்

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் எந்த நோயும் அண்டாது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இயற்கை தாய் நமக்கு வழங்கிய மிகவும் அற்புதமான பழங்களில் ஒன்று தான் ஆப்பிள். ஆப்பிள்களில் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மற்றும் வைட்டமின்கள் நிறைய இருப்பதால், ஒவ்வொருவரும் அன்றாட உணவில் தவறாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும். சிவப்பு வகை ஆப்பிள்கள் மிகவும் பொதுவாக காணப்படுகின்றன மற்றும் பச்சை நிற ஆப்பிள்கள் புளிப்பாக இருந்தாலும், சுவைப்பதற்கு இனிமையாக இருக்கும்.

1.கனிம உள்ளடக்கம்

பச்சை ஆப்பிள்கள் ஏராளமான தாதுக்களை கொண்டுள்ளது. தாதுப்பொருட்களான இரும்புச்சத்து, துத்தநாகம், தாமிரம், மாங்கனீசு, பொட்டாசியம் முதலிய சத்துக்கள் மனித சுகாதாரத்திற்கு வேண்டுவன ஆகும். அதிலும் ஆப்பிள்களில் இருக்கும் நுண்ணூட்டச் சத்தான இரும்புச்சத்து இரத்தத்தில் ஆக்ஸிஜனின் அளவை உயர்த்த உதவுகிறது.

2.இதயத்திற்கு ஆரோக்கியமானது

எடையை குறைக்க முயலுபவர்களுக்கு பச்சை ஆப்பிள் ஒரு சிறந்த உணவாக இருக்கிறது. அதிலும் அத்தகையவர்கள் ஒவ்வொரு நாளும் உணவில் ஒரு ஆப்பிளை சேர்க்க வேண்டும். மேலும் இது இரத்த நாளங்களில் கொழுப்பு சேகரிப்பதை தடுத்து, இதயத்திற்கு சரியான இரத்த ஓட்டத்தைப் பராமரிக்க உதவுகிறது.

3.சரும புற்றுநோயை தடுக்கிறது

பச்சை ஆப்பிளில் வைட்டமின் சி நிறைந்து காணப்படுவதால், இது கட்டற்ற தீவிர மூலக்கூறுகளால் சரும செல்களுக்கு எதிராக ஏற்படும் சேதத்தை தடுக்க உதவுகிறது. இதனால் சரும புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகளை குறைகிறது.

4.எதிர் ஆக்ஸிகரணிகள் நிறைந்தவை

பச்சை ஆப்பிள்களில் எதிர் ஆக்ஸிகரணிகள் நிறைந்து இருப்பதால், இது செல்கள் மீண்டும் உற்பத்தியாவதற்கும் மற்றும் செல்களுக்கு புத்துயிர் கொடுப்பதற்கும் முடிகிறது. மேலும் இது ஆரோக்கியமான மற்றும் ஒளிரும் சரும பராமரிப்புக்கும் உதவுகிறது.

5.ஆரோக்கியமான வலுவான எலும்புகள்

பச்சை ஆப்பிள்கள் தைராய்டு சுரப்பியை சரியான செயல்பாட்டில் இருக்க உதவி செய்வதால், அது வாத நோய் ஏற்படுவதைத் தடுக்கிறது

6.அல்சைமர் நோய்(நினைவாற்றலிழப்பு)

ஒவ்வொரு நாளும் ஒரு ஆப்பிள் உட்கொண்டால், அல்சைமர் என்னும் நினைவாற்றலிழப்பு நோய் ஏற்படும் வாய்ப்புகளை தடுக்கலாம்.

7.ஆஸ்துமாவைத் தடுக்கிறது

வழக்கமாக ஆப்பிள் பழச்சாற்றை குடிப்பதால், மிக நுண்ணிய உணர்வு நிலை ஒவ்வாமை நோயான ஆஸ்துமா ஏற்படும் வாய்ப்பைத் தடுக்க முடியும்.

8.நீரிழிவு நோயைத் தடுக்கிறது

ஆப்பிள்கள் நீரிழிவு நோயை தடுக்கிறது. அதனால் நீரிழிவு நோயாளிகள் தினமும் ஆப்பிள் உண்பதென்பது அவசியமாகிறது.

9.வைட்டமின் ஏ, பி மற்றும் சி நிறைந்தவையாகும்

பச்சை ஆப்பிள்களில் வைட்டமின் ஏ, பி மற்றும் சி நிறைந்துக் காணப்படுவதால், இது கட்டற்ற தீவிர மூலகூறுகளால் சரும செல்களுக்கு எதிராக ஏற்படும் சேதத்தை தடுக்க உதவுவதோடு, இது சருமத்தை பிரகாசிக்கவும் உதவுகிறது.

# விளையாட்டுப் பையன்

## BMW 2 Series Coupe கார்கள் விற்பனைக்கு தயாராகின



கார் பாவனையாளர்களின் மனங்களை வென்ற BMW நிறுவனத்தின் புதிய அறிமுகமாக BMW 2 Series Coupe கார்கள் சந்தைக்கு வரவுள்ளன. அடுத்த வருட ஆரம்பத்தில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் இக்கார்கள் 228i, M235i மொடல்களை கொண்டுள்ளன.

இதில் BMW 228i கார் ஆனது 240 குதிரை வலு உடையதாகவும் 5.4 செக்கன்களில் 155 mph எனும் வேகத்தை பெறக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை BMW M235i கார் 322 குதிரை வலு உடையதாகக் காணப்படுவதுடன் 4.8 செக்கன்களில் 155 mph எனும் வேகத்தை பெறக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது

BMW 228i காரின் விலையானது 33,025 டொலர்கள் எனவும், BMW M235i காரின் விலையானது 44,025 டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இதோ வந்துவிட்டது போதை ஏற்றும் ஐஸ்கிரீம்!

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடக்கூடிய பண்டங்களில் ஐஸ்கிரீமும் ஒன்று. இந்நிலையில் அமெரிக்காவில் புத்தம் புது சுவையுடன் கூடிய ஐஸ்கிரீம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது நியூயார்க்கை சேர்ந்த நிறுவனம் ஒன்று மதுபானம் கலந்து புதுமையான ஐஸ்கிரீமை ஏழு வகையான வித்தியாசமான சுவைகளில் அறிமுகம் செய்துள்ளது. அதற்கு புரோசன் பின்ட்ஸ்(Frozen Pints) என பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

454 மில்லி லிட்டர் அளவு கொண்ட பிளாஸ்டிக் குப்பியில் அடைத்து விற்கப்படும், இதில் 3.2 சதவீதம் ஆல்கஹால் சேர்க்கப்பட்டுள்ளது, விலை 4.33 டொலர் ஆகும். மேலும் குறைந்தபட்ச அளவிலேயே ஆல்கஹால் சேர்ந்திருப்பதால் உடனே போதை ஏறிவிடாது என்றும் இதை உருவாக்கிய அரி புலேஸ்லர் தெரிவித்துள்ளார்.

# ஒரு கொலையின் கதை

27 (மாயன்)

அன்றைய தினம் மதியம் 2 மணிக்குக் குற்றவாளிச் சந்தேக நபர்கள் இருவரும் தகுந்த பாதுகாப்புடன் பொது வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்காக... அனுமதிக்கப்பட்டார்கள்.

திருகோணமலைப் பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் முன் அவர்கள் கொண்டு வரப்பட்டனர். சட்ட வைத்தியர் அவ்விரவரும் செய்து முடிக்க வேண்டிய பரிசோதனைகளைப் பட்டியலிட்டு எங்கெங்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்பதையும் குறித்துக் கொண்டார். அவ்வாறே அவர்களிருவரும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பரிசோதனைக்கான நடவடிக்கைகள் நிறைவுற்ற பின்னர் அவர்கள் இருவரையும் சுமந்து கொண்டு காவல்துறை வண்டியானது நேராகவே திருகோணமலை விளக்கமறியல்ச் சிறைச்சாலைக்குச் சென்றது.

ஏற்கனவே உரிய வழிமுறைகள் யாவற்றையும் காவல்துறை முடித்திருந்ததால் நேரடியாகவே சிறைத்துறையிடம் காவல்துறை இரண்டு சந்தேக நபர்களையும் கையளித்தது.

நீதிபதி 20ம் திகதிவரை வழக்கை ஒத்தி வைத்த போதே சந்தேக நபர்களையும் சிறையிடும் உத்தரவையும் வழங்கியிருந்தார். அதற்கமையவே அவர்கள் இருவரும் சிறையிடப்பட்டனர்.

07ம் திகதி அவர்களின் மருத்துவ அறிக்கைகள் மாலை தயாராகியிருந்தன. அவ்வறிக்கைகளின் படி சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட வேளையிலோ அல்லது மருத்துவப் பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட போதோ மது அருந்தியிருக்கவில்லை என்பது தெளிவாக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவர்கள் இருவரினதும் உடல்களில் வெளிப்படையாத் தெரியத்தக்க காயங்கள் எவையும் இல்லை என்பதும் தெளிவாக்கப்பட்டிருந்தது.

இவ்விரு குறிப்புக்களும் புலனாய்வாளர்களுக்கு இன்றியமையாததாக இருந்தது.

வெளிப்படையாகத் தெரியத்தக்க காயங்கள் காணப்பட்டால் சந்தேக நபர்கள் சித்திரவதைக் குள்ளாக்கப் பட்டுள்ளனர் எனவும், சித்திரவதையாலேயே அவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள புலனாய்வாளர்களிடம் ஏதோவொரு வாக்குமூலத்தை அளித்துள்ளனர் எனவும், அவ்வாக்குமூலத்தை இக் கொலைக்கான ஒரு சான்றாக நீதிமன்று கொள்ளக்கூடாது என்றும் சந்தேக நபர்களின் சார்பில் முன்வரும் சட்டவாளர்கள் வாதிட்டு விடலாம்.

அவ்வாறு வாதிட்டால் சந்தெகநபர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது உளறிய விடயங்கள் வலுவற்றுப் போய்விடும்.

அவ்வாறே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட போது குடிபோதையிலிருந்திருந்தால் அவர்களின் வாக்குமூலம் வெற்றாகிவிடும் பண்பைக் கொண்டிருக்கும்.

எனவே தான் சட்டவைத்திய அதிகாரியின் இவ்விரு குறிப்புக்களும் புலனாய்வாளர்களுக்கு பெருந் தலையிடியொன்றை இல்லாதொழித் திருந்தன.

அடுத்து புலனாய்வாளர்களின் முன்னிருந்த முக்கியமான வேலை அடையாள அணிவகுப்பே!



ஏற்கனவே நாம் பேசியது போல கொலை நடந்த போது யாரும் கண்கண்ட சாட்சியாக இக் கொலைக்கு இல்லை.

அத்துடன் கொலைக்கான நேரடித் தொடர்பு எதனையும் சந்தேக நபர்களுக்கும் கொல்லப்பட்டவருக்கும் இடையே இருந்ததை நிரூபிக்கும் சான்றுகளும் இல்லை. ஆனால் கொலை நடந்த இடத்தில் கொலைக்குச் சற்று முன்னர் இவ்விரு சந்தேக நபர்களையும் கண்ணால் கண்ட ஒருவரை இக் கொலை தன்னகத்தே வைத்திருந்தது.



அவரால் இவர்கள் அடையாளம் காணப்பட்டால் மட்டுமே இவர்களைச் சந்தேக நபர்களாக கொள்ள முடியும் என புலனாய்வாளர்கள் ஆரம்பத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் மற்றொருவரும் இவர்களை நன்றாக ஞாபகம் வைத்திருந்தார். அவர் தான் இவர்கள் தங்கியிருந்த விடுதியின் வரவேற்பாளர்.......

ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது சந்தேக நபர்களில் ஒருவரான டொடி, அலிகவுடன் தான் திருமலைக்கு வந்திருந்ததாக ஒப்புக் கொண்டிருந்தார்.

அவ்வாறு வந்திருந்த போது திருகோணமலையிலுள்ள முன்னணி விடுதியொன்றில் அந்நாட்களில் தங்கியிருந்ததை உளறியிருந்தார்.

எனவே அவ்விடுதியில் சென்ற இவர்கள் தொடர்பாக விசாரித்து அறியலாம் என புலனாய்வாளர்கள் முடிவு செய்திருந்தனர்.

ஆரம்பத்தில் டொடியின் கூற்றின் மீது போதுமான அளவு நம்பிக்கையை அவர்கள் கொண்டிருக்கவில்லை. உண்மையில் குறித்த விடுதியில் தான் இவர்கள் தங்கியிருந்தார்களா? என்பதை அவர்கள் விசாரித்தறிய வேண்டியிருந்தது.

08ம் திகதி மாலை வெயில் மங்கியிருந்த போது இரண்டு வழிப்போக்கர்கள் அந்த விடுதியின் வரவேற்பறையில் இருந்த இளைஞனை அணுகினர்.

"மாலைவணக்கம்.... அறை யொன்றை வாடகைக்கு.." (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி வெற்றி

சாய்ந்தமருது பிரதேச செயலக அணிக்கும் அக்கரைப்பற்று பிரதேச செயலக அணிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அணிக்கு 11 பேர் கொண்ட 15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இரு சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டிகள் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை மைதானத்தில் கடந்த 26 ம் திகதி நடைபெற்றது. இரு போட்டிகளிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிரதேச செயலக அணி முதல் போட்டியில் 13 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களையும், இரண்டாம் போட்டியில் 11 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களையும் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி இரு தொடர்களிலும் வெற்றிபெற்றது. முதல் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி 14.1 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டினால் வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியின் 11 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 68 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டினால் வெற்றிபெற்றது.


## சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன்

அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியில் சோபர் விளையாட்டுக்கழம் சம்பியனானது. அணிக்கு ஆறுபேர் கொண்ட இச்சுற்றுபபோட்டியில் அம்பாறை மாவட்டத்திலிருந்து பிரபல்யமான 38 விளையாட்டுக் கழகங்கள் மோதிக்கொண்டன. அட்டாளைச்சேனை அஸ்ரப் பொதுவிளையாட்டு மைதானத்தில் கழகத்தின் உபதலைவர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் கடந்த 27ம் திகதி நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வில் கழகத்தின் தலைவரும் தொழிலதிபருமான யூ.கே.ஆதம்லெப்பை, இளைஞர் நாடாளுமன்றத்தின் சபை முதல்வர் யூ.எல்.சபீர் மற்றும் தொழிலதிபர் என்.அப்துல் றசீட், அதிபர் ஏ.முஸம்மில் உள்ளிட்ட பலர் அதிதிகளாக கலந்துகொண்டனர்.



## காந்தி ஸ்டார் அணி சம்பியன்

ஊறணி காந்திகிராமம் காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 5 தினங்களாக கிழக்கு மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட மின்னொளி கிரிக்கட் சுற்றுப்போட்டியில் காந்திகிராமம் காந்தி ஸ்டார் அணி சம்பியனாகியுள்ளது. 48 அணிகள் பங்கு கொண்ட இப்போட்டியில் முதலாமிடத்தை காந்திகிராமம் காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தை கரவேப்பங்கேணி சென் அந்தனிஸ் விளையாட்டுக் கழகமும் மூன்றாமிடத்தை மாமாங்கம் டிஸ்கோ விளையாட்டுக் கழகமும் நான்காமிடத்தை எவகிறீன் அணியினரும் பெற்றக்கொண்டனர். முதலாவது இடத்திற்கு வெற்றிக்கிண்ணமும் முப்பதனாயிரம் 'ரூபா பணப்பரிசும் இரண்டாமிடத்திற்கு வெற்றிக் கிண்ணமும் பதினையாயிரம் 'ரூபா பணப்பரிசும் மூன்றாமிடத்திற்கு வெற்றிக் கிண்ணமும் ஐயாயிரம் 'ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டதடன் நான்காமிடத்துக்கு வெற்றிக்கிண்ணம் மாத்திரம் வழங்கப்பட்டது. விளையாட்டுக் கழக தலைவர் தே.டிலக்சன் தலைமையில் இடம்பெற்ற இப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறப்பினர்களாகிய பொன்.செல்வராசா,பா.அரியநேத்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## கால்பந்து சம்பியன்

திருகோணமலை கால்பந்து லீக் தலைவர் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியினை நடத்தியது. இதன் இறுதிப்போட்டி கடந்த 26ம் திகதி ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் புனித அந்தோனி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பற்றிமா விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் புனித அந்தோனி விளையாட்டுக் கழகம் பற்றிமா விளையாட்டுக் கழகத்தை 6 இற்கு 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ரஞசித் ரொட்றிகோ பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.





## சினேகபூர்வ மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக ஏற்பாட்டின் கீழ் அக்கரைப்பற்று வலய அணியினரும், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய கோட்ட ஆசிரிய ஆணியினர்களுக்குமான சினேகபூர்வ மென்பந்து கிறிகெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை ஆசிரிய கோட்ட அணியினர் 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. மூன்று கோட்ட ஆசிரியர்களுக்கான போட்டியில் இறுதிப் போட்டிக்கு தெரிவான அக்கரைப்பற்று கோட்ட ஆசிரியர் அணியினரும், அட்டாளைச்சேனை கோட்ட ஆசிரியர் அணியினரும் மோதிக் கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று அணியினர் 8 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆசிரியர் எம்.றிப்தி 18 ஓட்டங்களையும், ஏ.ஜீ.பௌசான் 15 ஓட்டங்களையும் பெற்றக் கொடுத்தனர். என்.ஜே.மிஸ்வர் இரண்டு ஓவர் பந்து வீச்சுக்கு 8 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அட்டாளைச்சேனை ஆசிரியர் அணியினின் சார்பில் விளையாடிய அப்றாஜ் றிழா ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும், ஐ.எல்.எம்.பாயிஸ் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும், பெற்று 5.2 ஓவர் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

## மட்டக்களப்பில் கபடி போட்டி

முதல் தடவையாக மட்டக்களப்பில் நடைபெற்ற கபடி சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கேகாலை மாவட்ட மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் கம்பஹா மாவட்ட அணயும் முதலிடத்தை பெற்றுக்கொண்டன. இலங்கை கபடி சம்மேளனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மைக்கல்மென் விளையாட்டுக்கழகம் நடத்திய கிசோர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கபடி சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிகள் கடந்த 27 ம் திகதி நடைபெற்றன. இறுதிப்போட்டியில் பெண்கள் பிரிவில் கம்பஹா மாவட்ட அணியும், கேகலை மாவட்ட அணியும் மோதிகொண்டன. இப்போட்டியில், கம்பஹா மாவட்ட அணி 5 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஆண்கள் பிரிவுக்கான இறுதிப்போட்டி கேகாலை மாவட்ட அணிக்கும் காலி மாவட்ட அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் கேகாலை மாவட்ட அணி 20 புள்ளிகளையும், காலி மாணவட்ட அணி 9 புள்ளிகளையும் பெற்றது. 11 புள்ளிகள் வித்தியாசத்தில் கேகாலை மாவட்ட அணி வெற்றிபெற்றது. இந்த கபடி சுற்றுப்போட்டியில் 18 அணிகள் பங்குபற்றின.



## இரு அணிகளுக்கும் கிண்ணம் பகிர்ந்தளிப்பு

திருகோணமலை கால்பந்து லீக் முதல் தடவையாக பாடசாலைகளுக்கு இடையில் மாபெரும் ஆட்டம் ஒன்றினை நடத்தியது. கடந்த 26ம் திகதி ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட இப்போட்டியில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியை எதிர்கொண்டு கிண்ணியா மத்திய கல்லூரி மோதியது. இதில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு போல்களைப்போட்டனர். போட்டி சமநிலையில் முடிவடைந்ததால், இரு அணிகளும் இணை வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு கிண்ணம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கிழக்கு மாகாண கல்வி திணைக்கத்தின் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் திவாகரசர்மா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.



## மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இந்தியக் குழாம் அறிவிப்பு

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இந்திய டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 போட்டிகளுக்குமான குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. சச்சின் டெண்டுல்கரின் இறுதி டெஸ்ட் தொடராக அமையவுள்ள இந்தத் தொடரில் பங்குபற்றுவதற்கு மகேந்திரசிங் டோணி தலைமையில் 15 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.இந்தத் தொடர் நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், முதலாவது போட்டி கொல்கத்தாவிலும், இரண்டாவது போட்டி 14ஆம் திகதி மும்பையிலும் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:**

ஷீகர் தவான், முரளி விஜய், செற்றேஸ்வர் புஜாரா, சச்சின் டெண்டுல்கர், விராத் கோலி, ரவிச்சந்திரன் அஸ்வின், புவனேஸ்வர் குமார், பிரக்ஜான் ஓஜா, அமித் மிஷ்ரா, அஜின்கியா ரஹானே, உமேஷ் யாதவ், ஷாமி அஹமட், றோகித் சர்மா, இஷாந்த் சர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன வெளிநோயாளர் பிரிவு கொழும்பில்

கொழும்பின் தேசிய வைத்தியசாலை வளாகத்தில் அதி நவீன வசதிகளைக் கூடிய வெளிநோயாளர் பிரிவைக்கட்டும் ஒப்பந்தத்தை சீன அரசுக்குக்குடமை யான கம்பனியொன்றுக்கு இலங்கை அரசு வழங்கியுள்ளது. இவ் ஒப்பந்தம் 27.9 பில்லியன் ரூபாய்களுக்கான ஒப்ப ந்தமாக அமைந்துள்ளது.

இந்த கட்டுமானத் திட்டத்திற்கான முன்மொழிவு அறிக்கையையும், முன்மொழிவையும் சீன அரச நிறுவன ங்களே நிகழ்த்தியிருந்தன.

இலங்கையின் நிதி அமைச்சின் கீழ் இயங்கும் வெளிவளத் திணைக்க ளம் இக் கட்டுமானத்திற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சீன நிதி முகவர்களிடம் பேச்சுக்களை நிகழ்த்தி, அதற்கமைய நிதியையும் பெற்றுக்கொ ண்டுள்ளது.

the SUNDAY TIMES

## பொது நலவாய விமானங்களுக்குப் பாதுகாப்பு

பொதுநலவாயத் தலைவர்களைக் காவி வரும் விமானங்களுக்கு அதி நவீன பாதுகாப்பை வழங்க ஏற்பாடுகள் செய்ய ப்பட்டுள்ளன. வானோட வழிகாட்டல் நுட்பம் "Sahelite navigation system" மூலம் இப்பாதுகாப்புக்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இலங்கையின் பொதுப் பறப்பு ஆணையக (Civil aviahon Authority) அதிகாரியொ ருவரின் குறிப்பின்படி தன்னிச்சையான விழிப்புணர்ச்சித் தொடர்பாடல் நுட்பம் (Automatic Dependent surveellance Broadcant) இப் பாதுகாப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித் தார்.

## பொது நலவாயத்திற்கான பென்ஸ் கார்கள் இறக்குமதி

பொது நலவாய மாநாட்டிக்குத் தேவையான பென்ஸ் ரக சொகுசு கார்களை வரிச்சலுகையுடன் இறக்குமதி செய்யும் அனுமதியைக் கம்பனியொன்று பெற்றுள்ளது 54 மெர்சிடிஸ் பென்ஸ் 5400 ரக கார்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள வரி விடுதலை சுமார் 757.75 மில்லியன் ரூபாய்கள் ஆகும்.

இந்த வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்ட கம்பனி என "மெட்ரோபொலிஸ் லொஜிஸ்டிக்" கம்பனி வர்த்தமானியூடாக அறிவிக்கப் பட்டுள்ள போதும் இக் கார்கள் தங்களின் ஊடாகவே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என ''பென்ஸ்'' கார்களுக்கான இலங்கையில் அங்கீகாரம் பெற்ற முகவர் "டீமோ" கம்பனி தெரிவித்துள்ளது.

## ஆப்கான் பாகிஸ்தான் அகதிகள் மீது கண்காணிப்பு

இலங்கைக்குச் சட்ட முறையாக வந்திற ங்கிய பின் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்கள் ஊடாக அகதி அந்தஸ்த்துக் கோருவோர் பற்றிய தகவல்களை அரசு அவதானித்து வருகின்றது.

## வடமாகாண மீன்பிடி அமைச்சர் அத்துமீறிய மீன் பிடி தொடர்பில்நடவடிக்கை

இலங்கையின் வடகடலில் நடைபெறும் பெரும் எடுப்பிலான மீன்பிடி அத்து மீறல் செயற்பாடு தொடர்பில் நடவ டிக்கை எடுப்பதாக வடமாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவித்துள்ளார். இவ்விடயத்தைப் பற்றிப் பேசுவதற்காக இந்தியத் தமிழ்நாடு நோக்கித்தான் பயணிக்கப் போவதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

SUNDAY OBSERVER
Sri Lanka's English Newspaper with the largest circulation

## மாணவர் மைலக் கல்வி நோக்கிப் பல்கலைக் கழகங்கள்.

பல்கலைக் கல்வியை நவீன மயப்படுத்தும் முனைப்புடன் புதிய கல்வித் திட்டமொன்றை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது என உயர்க் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப் புதிய திட்டமானது பல்கலைக்கழக மாணவர்களிடையே மாணவர் மையக் கல்வியை ஊக்குவிக் கும் பொருட்டு உருவாக்கப்படுவதுடன் அறிவு, திறன், நடத்தை, மனோவியல்பு ஆகிய பண்புகளை வளர்க்கும் நோக்குடன் (K-SAM -Knowledge Skill Attitude and Mindoet) கல்வி முறையைப் புதிதாக எதிர்வரும் ஜனவ ரிமுதல் அமுலாக்கவுள்ளது.

## மருந்துப் பொருட்கள் இறக்குமதி இனி அரசும் பிற நாட்டரசுமே ஈடுபடும்



இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதில் அரசே நேரடியாக ஈடுபடுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இத் திட்டப்படி இறக்குமதி செய்யபட நாடுகின்ற நாட்டுடன் ஓர் புரிந்துணர் உடன்படிக்கையை சுகாதார அமைச்சு மேற்கொள்ளும் இவ்வாறு இறக்குமதி செய்தால் எப்போதுமே தரமான மருந்துவகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## அம்னெஸ்டி அமெரிக்காவை குற்றஞ்சுமத்தியது

பாகிஸ்தானில் ஆளில்லா விமானம் ஊடாக அமெரிக்கா மேற்கொள்ளும் தாக்குதல்களில் கொல்லப்படும் அப் பாவிப் பொதுமக்கள் தொடர்பாக அம்னெஸ்டி கண்டனம் வெளியிட்டு ள்ளது. "பாகிஸ்தானில் ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்படப் போவது நானா? என்ற தலைப்பில் அம் னெஸ்டி வெளியிட்டுள்ள ஆவண மொன்றிலேயே இவ்வாறு குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

## ஐ.தே.க கதவடைப்பு கொழும்பு முதல்வராக கலந்துகொள்ள முஸ்தீவு.

பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணி ப்பது என ஐ.தே.க முடிவு செய்துள்ள வேளையில் அதன் உறுப்பினரும் கொழும்பு மாநகரசபை முதல்வருமான ஏ.ஜே.எம் முஸம்மில் அவ்வாறு கலந்து கொள்ளாது விடுவது நியாயமற்ற செயல் எனத் தெரிவித்துள்ளார். பொது நலவாய மாநாடு என்பது ஒரு நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக உள்ள போது அரசியற் காரணங்க ளுக்காக அந் நிகழ்வைப் புறக்கணிப்பது தவறானது என்றும் அவர் அறியத்தந் துள்ளார்.

## விக்னேஸ்வரின் பேச்சுக்கு தெற்கில் வரவேற்பு

வடக்கு மக்கள் பிரிவினைவாதத்திற்கு எதிரானவர்கள் என்ற விக்னேஸ்வரனின் கூற்றுக்குத் தென்னிலங்கையில் கடும் வரவேற்புக் கிடைத்துள்ளது.

இலங்கையில் யாரெல்லாம் சமாதானம் மலர வேண்டும் என நினைக்கின்றார்களோ அவர்கள் இக் கூற்றை வரவேற்றிகின்றார்கள் என

சிரேஸ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளது.

## பொது வான்பரப்பு அதிகார சபை விசேட திட்ட மிடல்

பொது நலவாய நாட்டை முன்னிட்டு பொதுவான் பரப்பு அதிகாரசபையானது வான்பரப்புக்கள் தொடர்பான விசேட திட்டமொன்றை உருவாக்கவுள்ளது.

## இந்திய அரசு மீனவர் பிரச்சனையில் கரிசனை


இலங்கையிலுள்ள இந்திய தூதுதரக த்தின் அதிகாரிகள் இந்திய மீனவர்கள் தொடர் பான கரிசனையை வெளியிட் டுள்ளன. இலங்கை அரசானது அத்துமீறி மீன்பிடிக்கும் மீனவர்களின் பிரச்சனை தொடர்பில் கடும் நடவடிக்கைகளை எடுக்கச் சித்தமாகியுள்ளது. எல்லை தாண்டும் இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் மற்றைய நாடுகளின் பாதுகா ப்புப் படைகளால் கைதாகி வருவது குறிப்பிடத்தக்கது இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமும் இலங்கைத் தூதரக மும் நடவடிக்கைகளை முன்னெடுப் பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## தேசிய புலனாய்வுப் பணியகம் தகவல்களை திரட்டுகின்றது

பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்பான விபரங்களை தேசிய புலனாய்வுப் பணியகம் வருகின்றது. இதன்படி தகவல்கள் திரட்டப்பட்ட பின் பொதுநல வாயத் தலைவர்கள் தங்கியிருக்கும் தெருக்களின் ஊடாகப் பயனிக்கும் அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்த ப்பட்ட பின்னரே பயணிக்க அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிகின்றது. அதே வேளை மிகவும் வித்தியாசமான பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ள குழுக்கள் தொடர்பாகவும் பாகிஸ்தான், பங்களாதேஸ் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தருபவர்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. தற்போது வரை சுமார் 7800 பேரின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

The Sunday LEADER

## சாட்சிகள் கூட்டுக்குள் ஏறத்தேவையில்லை




சாட்சிகள் பாதுகாப்பு தொடர்பான புதிய சட்ட ஏற்பாடுகளின் படி கடுமையான குற்றங்களைப் புரிந்தவர்கள் தொடர்பான சாட்சியங்களைக் கூறுபவர்கள் சாட்சிச் கூட்டினுள் ஏற வேண்டிய தேவை இனி இருக்காது. அத்துடன் வெளிநாட்டிலிரு ந்தும் வருகை தந்து சாட்சியங்களை வழங்குவதற்கு ஊக்கமும் பாதுகாப்பும் புதிய சட்டமூலம் ஊடாக வழங்கப்பட் டுள்ளது.

## காவல் மா அதிபரால் வெளி நாட்டுப் பயணிகளுக்குப் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள்.

இலங்கையில் உள்ள வெளிநாட்டுப் பயணிகளின் பாதுகாப்பு உறுதிசெய்யும் முகமாக அவர்களின் விபரங்களைத் திரட்டுமாறு காவல் மா அதிபர் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி தகவல்கள் திரட்டப் பட்டபின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை யும் காவல்துறையினர் அவர்களது விடுதிகளுக்குச் சென்று அவர்களின் சேமநலன்களை விசாரிப்பர்.

## நீதிபதிகளுக்குக் கடுஞ்செலவில் பயிற்சி



உள்ளூர் நீதிபதிகளுக்கு வெளி நாடுகளில் பயிற்சியளிப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது. இவ்வாறு பயிற்சி யளிப்பதன் மூலம் விரைவாக தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதை ஊக்குவிக்க முடியும்என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வழங்கிய அறிவுரைக்கு ஏற்பவே இந் நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது.

## ஜோன் அமரதுங்க் தலைவர் பதவியிருந்து விலகல்

"ஜாதிக சேவா சங்கமய" என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க கூட்ட மைப்பின் தலைவர் பதவியை ஜோன் அமரதுங்க இராஜினாமாச் செய்ய உத் தேசித்திருப்பதாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான

## பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 10

பகுதி 01

01. வீட்டில் எறியப்படும் கழிவுப் பொருட்களிடையே மண்ணின் கட்டமைப்பில் தீங்கு பயக்கும் விளைவை ஏற்படுத்தும் பொருள் யாது?
    1. காய்கறிகளைக் துப்புரவாக்கும் போது கைவிடப்படும் பகுதிகள்
    2. இறைச்சி, மீன் ஆகியவற்றைத் தயார் செய்யும் போது கைவிடப்படும் பகுதிகள்
    3. பொலித்தீன் உறை 4. வெற்றுத் தகரப் பேணி

02. தாவரங்களினால் அகத்துறிஞ்சப்படும் நீர் பின்வரும் எக்கட்டமைப்பினால் கொண்டு செல்லப்படுகின்றது?
    1. காழ் 2. உரியம் 3. மையவிழையம்
    4. வேலிக்காற் புடைக்கலவிழையம்

03. மின்வலுவை அளக்கப் பயன்படுத்தப்படும் அலகு பின்வருவனவற்றுள் எது?
    1. அம்பியர் 2. வோல்ற்று 3. வாற்று 4. ஓம்

04. x d Wl d ; x d W 60° கோணத்திற் சாய்ந்துள்ள இரு தளவாடிகளுக்கு முன்பாகச் சிறிய பொருள் ஒன்றை வைக்கும் போது, அவற்றில் உண்டாகும் விம்பங்களின் எண்ணிக்கை யாது?
    1. 2 2. 4 3. 5 4. 6

05. நகர் ஒன்றிலே காகங்கள் அதிக எண்ணிக்கையிலே பெருகுவதால் நகரின் சுற்றாடல் பாதிக்கப்படுவதன் விளைவாகக் காகங்களைக் கொல்லுவதற்கு அதிகாரிகள் தீர்மானித்தனர். எனினும் சுற்றாலிலுள்ள அமைப்பு ஒன்று இதற்கு வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்தது. இதற்குரிய காரணமாக அமையத்தக்கது காகம்,
    1. ஒரு நாட்டுக்கு மாத்திரம் உரித்தானதாக இருக்கின்றமை
    2. அழிந்து செல்லும் பறவையாக இருக்கின்றமை
    3. இயற்கைக் கழிவுகளை அகற்றும் பறவையாகத் தொழிற்படுகின்றமை
    4. நகரிற்கு அழகியற் பெறுமதியை அளிக்கின்றமை

06. தன் மகரந்தச் சேர்க்கையிலும் பார்க்க அயன் மகரந்தச் சேர்க்கையில் உள்ள அனுகூலம் யாது?
    1. நடத்தை சார் இயல்புகள் மாற்றமடையாமல் பேணக்கூடியதாக இருத்தல்
    2. நடத்தை சார் இயல்புகள் கலந்து புதிய பேதங்கள் தோன்றுதல்
    3. வெவ்வேறான இரு இனங்களிற்கிடையே நிகழத்தக்கதாக இருத்தல்
    4. அயன்மகரந்தச் சேர்க்கை எளிதாக நிகழக்கூடியதாக இருத்தல்

07. குருதி உறைதலில் முக்கியத்துவம் வாய்ந்த குருதிக்கூறு எது?
    1. செங்குருதிச் சிறுதுணிக்கைகள் 2. வெண்குருதிச்சிறு துணிக்கைகள்
    3. சிறு தட்டுக்கள் 4. முதலுரு

08. ஒருவருடைய சிறுநீரின் மாதிரியைச் சோதித்துப் பார்த்தபோது, அதில் சீனி இருப்பதாக முடிவு செய்யப்பட்டது. அதில் மற்றைய பொருட்களின் அமைப்புகள் சாதாரண நிலையில் இருந்தன. அவருடைய எவ்வங்கத்தின் தொழிற்பாடு நோய்தாகியுள்ளது?
    1. இதயம் 2. சிறுநீரகம் 3. சதையி 4. ஈரல்

09. வண்ணாத்துப்பூச்சி, சிலந்தி, இறால் போன்ற விலங்குகள் ஆத்திரப்போடா கணத்திற்குரியன. இவையாவற்றிற்கும் பொதுவான இயல்பு யாது?
    1. குடம்பிப் பருவம் இருத்தல் 2. தாவரவுண்ணிகளாக இருத்தல்
    3. உடல் மேற்பரப்பில் ஈரத்தோல் இருத்தல்
    4. மூடிய தூக்கங்கள் இருத்தல்

10. வித்துக்கள் இல்லாத தோடம்பழங்களை உண்டாக்கும் தாவரத்தின் அரும்பு (ஒட்டுமுனை) எடுக்கப்பட்டு வித்துக்கள் உள்ள தோடம்பழங்கள் உண்டாக்கும் தாவரத்தில் (ஒட்டுக்கட்டையில்) ஒட்டப்பட்டது. உண்டாகும் தோடைகள் தொடர்பாக பின்வரும் எக்கூற்று திருத்தமானது?
    1. ஒட்டுக்கட்டை வித்துக்கள் உள்ளனவும் வித்துக்கள் அற்றவையுமான தோடைகளை உண்டாக்குகின்றது.
    2. ஒட்டுக்கட்டை வித்துக்கள் இல்லாத தோடைகளை மாத்திரம் உண்டாக்குகின்றது.
    3. ஒட்டுமுனை வித்துக்கள் இல்லாத தோடைகளை மாத்திரம் உண்டாக்குகின்றது.
    4. ஒட்டுமுனை வித்துக்கள் உள்ளனவும் வித்துக்கள் இல்லாததுமான தோடைகளை உண்டாக்குகின்றது.

11. உட்சுவாசத்தின் போது,
    1. பழுவுக்கிடைத் தசைகள் சுருங்கி பிரிமென்றகட்டுத் தசைகள் தளரும்
    2. பழுவுக்கிடைத் தசைகள் சுருங்கி பிரிமென்றகட்டுத் தசைகள் சுருங்கும்
    3. பழுவுக்கிடைத் தசைகள் தளர்ந்து பிரிமென்றகட்டுத் தசைகள் சுருங்கும்
    4. பழுவுக்கிடைத் தசைகள் தளர்ந்து பிரிமென்றகட்டுத் தசைகள் தளரும்.

12. இரும்பு ஒட்சைட்டுகளைப் பின்வரும் எவ்வாயு இரும்பாக மாற்றும்?
    1. ஒட்சிசன் 2. நைதரசன் 3. காபனீரொட்சைட்டு
    4. காபனோரொட்சைட்டு

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்

குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்.

### பாடம் - கணிதம், 10

பகுதி 02

01. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 4 சிவப்பு பந்துகளும், 3 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னவ் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.

1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

02.

அ. கூட்டல் விருத்தி ஒன்றின் ஐந்தாம் உறுப்பு 15உம் ஒன்பதாம் உறுப்பு 39உம் ஆகும். இவ்விருத்தியின்,

1. முதலுறுப்பு, பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க.

2. $n$ ஆம் உறுப்புக்கான கோவையைத் தருக.


3. முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

4. 88 இத்தொடரின் ஓர் உறுப்பாகுமா?

ஆ. 96 இற்கும் 6 இற்கும் இடையில் மூன்று பெருக்கல் இடைகளைக் காண்க.

03.

அ. தரப்பட்ட உருவில்




1. $AX = XB$, $CY = BY$ எனின், $AC$, $XY$ என்பவற்றுக்கிடையிலான தொடர்பை குறிப்பிடுக. காரணங்களையும் தருக.

2. $AX = XB$, $AC // XY$ எனின், பக்கம் $BC$ இல் $Y$ என்னும் புள்ளியின் அமைவு பற்றி கூறக்கூடிய தொடர்பு யாது?

ஆ. முக்கோணி $ABC$ இல் $AX = BX$ உம் $XY // BC$ உம் ஆகும். பக்கம் $AC$ ஆனது $CD = \frac{1}{2} AC$ ஆகுமாறு $D$ வரை நீட்டப்பட்டுள்ளது. $XD$, $BC$ ஒன்றை ஒன்று $Z$ இல் இடைவெட்டுகின்றன.

1. $BC$ ஆனது $XD$ ஐ இல் $Z$ இருசமகூறிடுகிறது எனவும்
2. $BC = 4ZC$ எனவும் நிறுவுக.

04. நபர் ஒருவர் ரூபா 50000ற்கு கொள்வனவு செய்த குளிர்சாதனப் பெட்டி ஒன்றை 50% இலாபத்தில் விலை குறித்து பின்னர் 20% கழிவில் விற்கின்றார்.

1. குளிர் சாதனப் பெட்டியின் குறித்த விலை யாது?

2. குளிர் சாதனப் பெட்டியின் விற்ற விலை யாது?

3. விற்றுப் பெற்ற பணத்தை 11% எளியவட்டி வழங்கும் நிறுவனம் ஒன்றில் 2 வருடங்களுக்கு வைப்பிலிடுவதினால் பெறப்படும் வட்டிப் பணம் எவ்வளவு?

4. அப்பணத்தை 10% கூட்டு வட்டி வழங்கும் வங்கியில் 2 வருடங்களுக்கு வைப்பிலிட்டால் பெறப்படும் கூட்டுவட்டி எவ்வளவு?
எது இலாபகரமானது ,என அவருக்கு அறிவுரை வழங்குக.

05. 1. சுருக்குக. $\left[\frac{1}{2}+\frac{1}{3}\right] \div 1\frac{2}{3}$

2. $\log 50 + 3\log 2 - 2\log 2$ இன் பெறுமானத்தைக் காண்க.

3. தீர்க்க $\frac{3}{x}+\frac{1}{y}=12$, $\frac{2}{x}+\frac{1}{y}=11$

பிரபல கணித ஆசிரியர்

T. குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 11 பாடம் - வரலாறு

01. இலங்கை வரலாற்றின் கடைசி சிங்கள மன்னன்
    1. 2 ஆம் இராஜசிங்கன் 2. 1 ஆம் இராஜசிங்கன்
    3. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
02. இத்தாலிய இணைவின் போர்வீரன் என அழைக்கப்படும் நபர்
    1. பீஸ்மார்க் 2. கரிபாஸ்டி 3. கவூண்கவுர் 4. ஜோசப் மஸினி
03. புவியியலின் அமைப்புக் காரணமாக நிலை பெற்ற இராசதானி
    1.அநுராதபுர 2.பொலநறுவை 3.கண்டி
    4.சீதாவாக்கை
04. பின்வருவனவற்றுள் தொல்பொருள் மூலாதாரமாக கருத முடியாதது
    1.அம்பகமுகல்வெட்டு 2.வெஸ்ஸகிரி கல்வெட்டு
    3.சமந்துபாஸாதிகாவ 4.கல்பொத்த
05. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
    1 .விஜயபாகு காணிகளை பகிர்ந்தளித்தமை
    2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
    3. வசப மன்னனின் நாகதீப ஆட்சிப்பரம்பல்
    4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி
06. 1. மல்வத்து ஓயா அ உருவெலகம
    2. கலா ஓயா ஆ அனுராதகம
    3. கிரிந்தி ஓயா இ மகாகம
    4. மாணிக்க கங்கை ஈ கஜரகம
    நதிக்கரைகளில் தோற்றம் பெற்ற குடியேற்றங்களின் ஒழுங்கு
    1. அஆஇஈ 2. ஆஇஅஈ 3. ஆஅஇஈ 4. இஆஅஈ
07. ஆரியர் இந்தியாவில் குடியேறிய முதல் பிரதேசம்
    1. சப்தசிந்து 2. கங்கைச்சமவெளி 3. விந்திய மலைத் தொடர்
    4. இமாலயம்
08. ஆரியரின் சமூக அமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்ட பணிகளுள் பொருத்தமற்றது
    1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
    2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
    3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
    4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்
09. அ. மூன்றாவது பௌத்த பேரவை மாநாட்டைக் கூட்டல்
    ஆ. மகாயான பௌத்தத்தை சீனாவில் பரப்புதல்
    இ. சாஞ்சி தூபி உட்பட பல தூபிகளை அமைத்தல்
    ஈ. நீலராஜன், ஹஸ்திவர்மன் போன்றோரை தோற்கடித்தல்
    மேற்படி விடயங்களுள் மௌரியர் கால நிகழ்ச்சி
    1. அ. ஆ 2. அ. இ 3. இ. ஈ 4. ஆ, ஈ
10. மகாராஜாதிராஜா என்ற பட்டத்தை பெற்றுக் கொண்ட குப்த பேரசின் முதல் மன்னன்
    1. சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன் 3. சந்திரகுப்த மௌரியன்
    4. குமார குப்தன்
11. இறந்தவர்களுக்கான மரணச்சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்
    1. கித்துல்கல,பாகியன்கல,பட்ட தொம்ப
    2. பட்டதொம்ப,அலுலென,பெல்லன்பதிபெல்லச
    3. பாகியன்கல,நில்கல,பெலிகல்கே 4. இராவணன் எல்ல,நில்கல,கித்துல்கல
12. இலங்கையில் மகாவலி ஆறு சங்கமிக்கும் இடத்தில் அமையப் பெற்ற துறைமுகம்
    1. உருவெல 2. கோகண்ண 3. ஜம்கோளப்பட்டினம்
    4. கொடவாய
13. 1. எல்லாளன் அ அசேலன்
    2. சேனன்-குத்தின் ஆ 2 ஆம் பராக்கிரமபாகு
    3. கலிங்க மன்னன் இ வலகம்பா
    4. தாதிகன் ஈ துட்டகைமுனு
    மேற்படி அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்டவர்களின் சரியான ஒழுங்கு
    1. அஆஈஇ 2. ஈஅஆஇ 3. ஈஅஇஆ 4. இஈஅஆ
14. இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தூபி
    1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய 3. அபயகிரி
    4. ஜேத்தவனராமய
15. கலிங்க மாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேச ஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்
    1.மினிப்பே 2.கோவிந்தமல 3.யாப்பகூவ 4.தம்பதெனியா
16. குருணாகல் இராசதானி காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
    அ பாண்டிய ஆரியச் சக்கரவத்தி புனித தந்ததாசவை அபகரித்துச்செல்லல்
    ஆ ராஜபுத்திர வீரர்களின் உதவியுடன் புவனேகபாகு ஆட்சி அமைத்தல்
    இ நிஸ்ஸங்க அழக கோணாரால் கோட்டை அமைத்தல்
    ஈ அம்புலுகல குமாரயா ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்குதல்
    1. அ, இ 2. அ, ஆ 3. அ, ஈ 4. ஈ, இ
17. பின்வருவனவற்றுள் முதல் தேசிய அரசு
    1. ஸ்பானியா 2. போர்த்துக்கல் 3. இங்கிலாந்து 4. ஒல்லாந்து
18. மானிய முறையின் அம்சமாக கருத கூடியது
    1. ஆட்சி முறை ஒருமுகப்பட்டிருந்தது
    2. கலைஞர்கள் தங்களின் கலைப்படைப்புக்களை சுதந்திரமாக வெளியிட்டமை
    3. பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வங்கி முறை தோற்றம்
    4. மக்களின் வாழ்க்கையில் சமயத்துக்கு முன்னுரிமை அளித்தமை

ஆசிரியர் :
**த. அகிலன்,** Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. இலங்கையில் இறுதியாக சுனாமி ஏற்பட்ட ஆண்டு, மாதம் எது?
   1. 2004 நவம்பர் 2. 2003 டிசம்பர் 3. 2004 டிசம்பர்
2. ஒரு மாணவர் 4 பாடங்களில் பெற்ற புள்ளிகள் முறையே 88, 97, 92, 75 ஆயின், அவனது சராசரிப் புள்ளி என்ன?
   1. 176 2. 352 3. 88
3. தொலைந்து போன அடையாள அட்டை பற்றிய தகவலைத் தெரிவிக்க வேண்டிய இடம்?
   1. கிராமசேவகர் அலுவலகம் 2. பிரதேச செயலகம்
   3. பொலீஸ்நிலையம்

**பின்வரும் பாடலை வாசித்து 4, 5ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

கடலிற் பொங்கும் திரையைப்பார்
காற்றில் சிதறும் நுரையைப்பார்
அலைகள் மோதும் கரையைப்பார்
அவைகள் தடவும் தரையைப்பார்

4. இப்பாடலிலுள்ள ஒத்து ஒலிக்கும் சொற்கள்?
   1. கடலில், காற்றில் 2. திரை, நுரை 3. பொங்கும், மோதும்கடலில்
5. நுரைகள் தோன்றுவதற்குக் காரணம்?
   1. காற்று வீசுவதால் 2. கடல் பொங்குவதால்
   3. அலைகள் மோதுவதால்
6. மஸ்கெலிய ஓயாவில் உற்பத்தியாகி, ஹட்டன் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் நீர்வீழ்ச்சி எது?
   1. லக்சபான 2. தியலும 3. துங்ஹிந்த
7. இவர் "ஸ்ரீபாத" எனும் நூலை வெளியிட்டவர். மக்கள் மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்ப்பதற்கு அரும்பாடு பட்டவர். இவரே மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருத்துவ சாலையை ஸ்தாபித்தவர். இவர் யார்?
   1. கெப்பட்டிப்பொல திசாவை 2. வண. எஸ் மகிந்த
   3. கொங்காலே கொடபண்டா
8. "வளியின் அசைவே காற்றாகும்" தரையிலிருந்து கடலை நோக்கி வீசும் காற்று எவ்வாறு அழைக்கப்படும்?
   1. தரைக்காற்று 2. நீர்க்காற்று 3. கடல் காற்று
9. நீர் வட்டம் எனப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   1. நீர் வட்டவடிவில் ஓடுதல்
   2. நீர்வீழ்ச்சி ஆறாக ஓடி கடலுடன் கலத்தல்
   3. நீர் ஆவியாகி ஒடுங்கி, மழைமுகிலாகி, மழையாக மீண்டும் நிலத்தை அடைதல்.
10. மின்னேரியா குளத்தை கட்டுவித்த மன்னன் யார்?
   1. மகாசேனன் 2. வசபன் 3. தாதுசேனன்
11. ரூபா 1520 விலையுள்ள ஒரு பயிற்சிப்புத்தகத்தையும் ரூபா 47 விலையுள்ள அடிமட்டத்தையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபா 106 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?
   1. ரூபா 1567 2. ரூபா 1461 3. ரூபா 1407

**12, 13, 14ம் வினாக்களுக்கு கீழ்வரும் தகவலை வாசித்து விடையளிக்குக.**

சஞ்சு, டோலி ஆகிய இருவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 353 செ.மீ ஆகும். சஞ்சு, அம்மு ஆகியோரின் உயரங்களின் கூட்டுத்தொகை 340 செ.மீ ஆகும். மூவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 521 செ.மீ ஆகும்

12. அம்முவின் உயரம் யாது?
   1. 168 செ. மீ 2. 181 செ. மீ 3. 172 செ. மீ
13. மிகவும் உயரம் குறைந்தவர் யார்?
   1. சஞ்சு 2. அம்மு 3. டோலி
14. டோலி மற்றும் அம்முவின் உயரங்களின் கூட்டுத்தொகை யாது?
   1. 351 செ. மீ 2. 355 செ. மீ 3. 349 செ. மீ
15. ஒரு வியாபாரி தன்னிடமிருந்த விளாம்பழங்களில் 7 பழுதடைந்த பழங்களை எறிந்த பின் எஞ்சியுள்ள பழங்களை 9 சம குவியல்களாகக் குவித்தார். ஒரு குவியலில் இருந்த பழங்களின் எண்ணிக்கை 22 எனின், அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பழங்கள் எத்தனை?
   1. 205 2. 191 3. 118
16. இலங்கையின் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் இடம்?
   1. ஜனகலாகேத்திரம் 2. சலுசல 3. ஒசுசல
17. கீழ் உள்ள பூக்களில் நறுமணம் வீசுவது எது?
   1. காட்டு மல்லிகை 2. வாடாமல்லிகை 3. மல்லிகை
18. எமது வீட்டிற்கு நேரடியாகக் கிடைக்கக் கூடிய சேவை ஒன்று
   1. போக்குவரத்து 2. மருத்துவம் 3. தபால்

பெயர்: ..............................................
முகவரி: ..............................................
..............................................
..............................................
பாடசாலை: ..............................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# புறம் ஒரு விஷம்

மனிதனின் மானம் வானம் போல் பெரியது மானத்திற்கு முன்னால் மனிதனின் உயிர் மற்றும் உடைமைகள் அத்திப்பழக்கத்தின் விதையை விடவும் சிறியவை மானம் காப்பதும் மரியாதை கேட்பதும் மனிதனின் குருதியில் ஊறிய குணாதிசியங்கள்.

"மானம் இழந்தவன் தன் உயிரை இழந்தான்" என்பார்கள் நம் முன்னோர்கள் மானத்திற்கு இழுக்கு நிகழ்ந்திடும் போது மனிதன் தற்கொலை செய்து கொள்கிறான். அல்லது சமூகத்தை விட்டும் ஓடி ஒழிந்து கொள்கிறான்.

இஸ்லாம் மனிதனின் மானத்தை உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கிறது. மனிதனின் கற்புக்கும் உயிருக்கும் உடைமைக்கும் மான மரியாதைக்கும் இஸ்லாம் உறுதியான பாதுகாப்பு வழங் கி அவனது சாந்தமான வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளது. ஒருவருக் கொருவர் மானம் மரியாதையில் கைவைத்து கண்ணியத்தில் அத்து மீறினால் அவர்களுக்கு கடுமையான தண்டனைகளிருப்பதாக இஸ்லாம் எச்சரிக்கை செய்கிறது.

நபி அவர்கள் தன்னுடைய இறுதி ஹஜ்ஜின்போது தனது நன்நெறித் தோழர்களுக்கு ஆற்றிய உரையின் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் "இந்த மாதமும் இந்த புனித மிக்க மக்கா நகரமும் இந்த நாளும் எப்படி புனிதமானதோ அவ்வாறே ஒரு முஸ்லிமின் கண்ணியம், உயிர் உடமைகள் புனிதமானவை. ஒரு முஸ்லிமுடைய கண்ணியம் அவனுடைய இரத்தம் அவனு டைய சொத்துச் செல்வங்கள் மற்ற முஸ்லிம்களுக்கு ஹராமானவை.

மேற்படி நபி மொழி ஒரு முஸ்லிம் எவ்வாறு மக்கா நகரத்தின் புனிதத்தைப் பேண வேண்டுமோ அவ்வாறே இன்னொரு முஸ்லிமின் கண்ணியத்தையும் மானத்தையும் பேண வேண்டும் எனப் பணிக்கின்றது.

பூவைப்போல பேண வேண்டிய மானத்தை பங்கப் படுத்துவதில் முதல் இடத்தில் இருக்கும் முக்கிய மான விடயம் "புறம்" எனும் விஷமா கும். பெரும்பாலும் நான்கு பேர் ஒரு சபையின் ஒன்று கூடினால் அடுத்தவ ரின்குற்றங் குறைகளைப் பற்றிப் பேசா மல் அந்தசபையை விட்டு விலகிச் செல்வதில்லைதனதுசகோதர முஸ்லிமின் குறையை அம்பலப்படுத்தி சந்திக்கிழுப்பது கரும்பு மாதிரி.

புறம் பேசுபவரும் புறம் கேட்பவரும் தேன் அருந்துவதைப் போன்று அடுத்தவரின் குறையை ரசிக்கின்றனர். இந்தப் புறம் எனும் விஷத்தை சமூகத்தில் அருந்தாதவர்கள் அரிதிலும் அரிது கற்றவன் கல்லாதவன் ஏழை பணக்காரன், பெரியவன், சிறியவன் ஆண்கள் பெண்கள் என்ற பாகுபாடின்றி இதன் தீயவிளைவுகளை அறிந்தோ அறியாமலோ சமூகத்திலுள்ள எல்லா மட்டத்தினரும் இந்தக் குற்றத்தைப் புரிகின்றனர்.

புறம் என்றால் என்ன என்று நீங்கள்அறிவீர்களா? என நபி அவர்கள் தம் தோழர்களிடம் கேட்டார்கள் அதற்கவர்கள் அல்லாஹ்வும் அவன் தூதருமே நன்கறிந்தவர்கள் எனக் கூறினார்கள். பிறகு நபி அவர்கள் (புறம் என்பது) நீர் உன் சகோதரனைப் பற்றி விரும்பாததைக் கூறுவதாகும் எனக் கூறினார்கள்.



# நபி ஸல்லல்லாஹு அலைஹி அவர்கள் கூறினார்கள்

* ஒருவர் குர்ஆனை ஓதுகிறார் அது இறை வேதம் என உறுதியாக நம்புகிறார் தமது வாழ்வை அதன் அச்சில் அமைத்துக் கொள்கிறார்.
* இரண்டாமவர் நற்செயல்கள் நிறைய புரிகிறார் ஆனால் குர் ஆனை வாசிக்கும் பழக்கம் இல்லாதவராக இருக்கிறார்.
* முதலாமவர், ஆரஞ்சுப் பழத்தைப் போன்றவர் அதன் சுவையும் இனிது வாசனையும் இனிது.

மிகுதி அடுத்த வாரம்.........



# வெளிநாட்டு மோகம்

எங்கு சென்றால் நிம்மதி என்று நினைத்தார்களோ! எங்கு சென்றால் நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்தார்களோ! அவைகள் அனைத்தும் நரகத்தின் படுகுழியாக பெண்களுக்கு அமைந்து விடுவதை அரசாங்கம் அறிவிப்புகளின்படி காணலாம். வேலையை முடித்து விட்டு திரும்பும் போது பழைய துணிமணிகளை அள்ளிக் கொண்டு வருவதையும் காணலாம்.

சில கணவன்மார்களோ மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு இங்கு வேறொரு பெண்ணோடு தொடர்பு வைத்திருப்பதையும் காணலாம். மேலும் வளர்ந்து வரும் பிள்ளைகளும் பெற்றோர்களின் அன்பு அரவணைப்பு இல்லாமல் தவறான வழிகளில் சென்று விடுவதையும் காணலாம் எந்த பிள்ளைக்காக பணம் சம்பாதிக்க வெளிநாட்டிற்குச் சென்றார்களோ அந்த பிள்ளைகளை இழந்து விடுகிறார்கள். கணவனையும் இழந்து பல இழிச் சொல்லுக்கும் ஆளாகும் அதிகமான பெண்களை காணலாம். எந்த பிள்ளைக்காக பணம் சம்பாதிக்க வெளிநாட்டிற்குச் சென்றார்களோ அந்த பிள்ளைகளை இழந்த விடுகிறார்கள். கணவனையும் இழந்து பல இழி சொல்லுக்கும் ஆளாகும் அதிகமான பெண்களைக் காணலாம்.

இப்படி பலவிதமான பிரச்சினைகளை பெண்கள் சந்திப்பது தெரிந்தும் நமது பெண்கள் வெளிநாட்டிற்கு படை எடுக்கிறார்கள். என்றால் இவர்களை எப்படிக் கூறுவது? இந்த நிலையில் இளம் பெண்களாக இருக்கலாம் அல்லது திருமணம் முடித்த பெண்களாக இருக்கலாம். தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வது ஹராம் என்பதை விளங்கி நடந்து கொள்ள வேண்டும்.அதே போல் ஆண்கள் வெளிநாட்டிற்கு தொழிலுக்காக செல்வது கூடுமா? கூடாதா? என்பதை இன்றைய அளவில் வைத்துப் பார்த்தால். ஆண்களைப் பொறுத்தவரை இரண்டாகப் பிரிக்கலாம் திருமணம் முடிக்காதவர்கள் திருமணம் முடித்தவர்கள், திருமணம் முடிக்காதவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று பல வருடங்கள் தொழில் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. அதே நேரம் திருமணம் முடித்தவர்கள் பல வருடங்கள் மனைவி பிள்ளைகளை விட்டுப் பிரிந்து வாழ்கிறார்கள். திருமணம் முடிந்த பின் மனைவியை நீண்டகாலம் விட்டு பிரிந்திருப்பதை இஸ்லாம் தடை செய்கிறது.

தொடரும்.........




# பளபள முகத்துக்கு



உங்கள் முக அழகைப் பேணிக்காக்க அதுவும் நங்களே தயாரித்துக் கொள்ள உங்களுக்காக சில **டிப்ஸ்..........**

**தேவையான பொருட்கள்:** நன்னாரி 10 கிராம்,ரோஜா இதழ் காய்ந்தது 10 கிராம், வெந்தயம் (வறுத்தபொடி) 2தேகரண்டி, சந்தனத்தூள் 2தேகரண்டி, செஞ்சந்தனம் 10 கிராம், காய்ந்த எலுமிச்சைத் தோல் 10 கிராம்.

**செய்முறை:**அனைத்து பொருட்களை எடுத்து நீர் விட்டு இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் அரைத்து அதனுடன் முட்டையின் வெள்ளை கருவை கலந்து நன்றாக குழைத்து முகத்தில் நன்கு பூசி 15 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவினால், முகவரட்சி, முகப்பரு, கண்களின் கீழ் தோன்றும் கருவளையம் போன்றவை நீங்கி முகம் பளிச்சிடும் மேலும் இந்தக் கலவையை கழுத்தில் பூசிவந்தால் கழுத்தில் நகை அணிவதால் உண்டாகும் கறுப்பு நிறம் மாறும்.

**அஸ்வினி அழகுக்கலை நிலையம்**

# பொடுகை விரட்ட வேப்பம்பூ



காய்ந்த வேப்பம்பூவில் (உப்பு கலக்காத வேப்பம்பூ) 50 கிராம் அதை 100 கிராம் தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இளம் சூட்டுப் பதத்திற்கு ஆறியதும், வேப்பம் பூவுடன் சேர்த்து எண்ணெயை தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணிநேரம் ஊறிக் குளித்தால்,பொடுகுப் பிரச்சனை தீரும்.

அதிகம் பொடுகு உள்ளவர்கள், வாரத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ, மூன்று வாரங்கள் குளித்தால் [illegible] விடும்.

# பற்களை எவ்விதம் பாதுகாப்பது



இரவில் படுக்கைக்குப் போகும் முன்னர் பற்களை துலக்குவது அவசியம். இரவில்தான் பக்டீரியாக்கள் பற்களின் இடுக்குகளில் எஞ்சியுள்ள உணவுப்பொருட்களைச் சுற்றி ஒரு வித அமிலத்தைச் சுரக்கின்றன.

அவை பற்களில் உள்ள எனாமல்களை அரித்து விடுகின்றன. சுத்தமான நீரால், வாயை நன்றாக அலசி கொப்பளிக்க வேண்டும். இது பற்களுக்கு இடையே மாட்டிக்கொண்ட சிறு சிறு உணவுத்துகள்களை எளிதில் அகற்றி விடும்.

பாக்டீரியாக்களின் வெதுவெதுப்பான படுக்கையாக நாக்கு உள்ளது. அதனால், நாக்கின் மேலும், கீழும் நன்றாக சுத்தம் செய்வது அவசியம். தற்போது நாக்கைச் சுத்தம் செய்யும் வகையில் சொரசொரப்பான பிரஷ்களும் உள்ளன.

ஆண்டுக்கு இருமுறையாவது பல் மருத்துவரிடம் சென்று பற்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் பற்களுக்கும், உடலுக்கும் உடனடியான தீர்வு கிடைக்கும்.



# நகப் பராமரிப்பு

கை விரல் நகங்கள் இளம் சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டும். இதில் வெள்ளை நிறம் ரத்த சோகையையும், மஞ்சள் காமாலையையும் குறிக்கும். விரல் நகங்களுக்கு நடுவில் சொத்தை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான காரணத்தை அறிவது நல்லது.

கைப்புண்ணிற்கு கண்ணாடி தேவையா என்பது பழமொழி. அதே போல் நம் கை விரல் நகங்களைக் கொண்டே நமது உடல் ஆரோக்கியத்தைக் காட்டும் வகையில் மனித உடல் அமைந்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரானிய எண்ணைக் கொள்வனவு அமெரிக்கா எச்சரிக்கை



அமெரிக்க இராஜாங்கத் திணைக்கத்தின் கடுமையான எச்சரிக்கை செய்தி ஒன்று சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவிடம், நேரடியாக கையளிக்கப் பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்தவாரம், அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் சிறப்புச் செய்தி ஒன்றுடன் அலரி மாளிகைக்குச் சென்று சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்தார். ஈரானிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை சிறிலங்கா நிறுத்தத் தவறினால் பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அதில் எச்சரித்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அதேவேளை, ஈரானுடன் சிறிலங்கா நெருக்கமான இராஜதந்திர உறவுகளை வைத்துள்ளது. அமெரிக்காவின் தடைகளை அடுத்து, ஈரானிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்குவதை சிறிலங்கா நிறுத்தியுள்ளது. எனினும், அமெரிக்காவின் தடையை மீறும் வகையில், மூன்றாவது தரப்பு ஊடாக ஈரானிய மசகு எண்ணெயை சிறிலங்கா வாங்குவதாக, அமெரிக்காவுக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதையடுத்தே, அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

## தென்னமரவாடியில் விவசாயியின் மீது காவல்துறை தாக்குதல்

சாதாரண உடையில் வந்த காவலர் ஒருவரால் தாக்கப்பட்ட விவசாயி ஒருவர் திருகோணமலைப் பொது வைத்திய சாலையில் அவசர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென்னமரவாடி சந்திப் பிள்ளையாரடி, அமரவயல் காணிப் பகுதியில் விதைப்பினை மேற்கொண்டிருந்த பா.இராசவேல் என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31.10.2013 அன்று தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்த பா.இராசவேலை அணுகிய சிவில் உடைக் காவலர் ஒருவர் அவரைப் புல்மோட்டைக் காவல் அலுவலகத்திற்கு வருமாறு அழைத்துள்ளார். அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்ததுடன் தனது உறவினர்களுடன் மாலை நேரத்திற்குள் வருமாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனது சகோதரனுக்கு கைத்தொலைபேசியூடாக அழைப் பெடுத்து அக்காவலருடன் கதைக்கும் படியும் தெரிவித்துள்ளார். இதையடுத்து அக்காவலர் அவ்விடத்தை விட்டு சென்ற சில மணிநேரங்களில் மற்றொரு காவலர் சிவில் உடையில் வந்து இராசவேலை விலங்கிட்டதுடன் அவ்விடத்திலேயே வைத்துத் தாக்கியும் உள்ளார். பின்னர் காவல்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முடுக்கியுள்ளார். விடயம் திருகோண மலையில் உள்ள உறவினர்களுக்குத் தெரியவரவே திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயாவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்து அவர் காவல் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளார். அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை இராசவேல் விடுவிக்கப் பட்டுள்ளார்.

இராசவேல் அவர்களின் தகப்பனாரின் காசுக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாகவே தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாகவே காவல்துறையால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிகின்றது.



## போதையில் தொடருந்தை முட்டினார் – கண் கழன்றது



சீனக்குடா கொட்வே பகுதியில் குடிபோதையில் வந்த 26வயது இளைஞன் ஒருவன் தொடருந்தில் அடிப்பட்டு ஒரு கண் வெளியே வந்த நிலையில் கண்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கடந்த 29.10.2013 அன்று மகிந்த சஞ்சீவ(26) எனும் இளைஞன் மது அருந்திவிட்டு வீடு திரும்பும் வழியில் இரவு 8.15 மணியளவில் திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த தொடருந்தில் அடிப்பட்டு ஒரு கண் வெளியே வந்த நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இரவு 9.00 மணியளவில் கண்டி அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (உதயா-அனுர)

## மொறவெவ பாடசாலைக் கொள்ளையர்கள் கைது

திருகோணமலையில் மொறவெவவில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் கதவினை உடைத்துக் கணணிகள் சில களவாடப்பட்ட சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்த விசாரணையில் இறங்கிய காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் மாணவர் இருவரைக் கைதாக்கி ஆரம்பக் கட்ட விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

## தாதியர் வேலை நிறுத்தப் போராட்டம் வெறிச்சோடியது பொது வைத்தியசாலை

திருகோணமலை பொது வைத்தியசாலையில் 01.11.2013 அன்று 05 முக்கிய கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தாதியர் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்று நடைபெற்று வருகின்றது.

இப்போராட்டம் பற்றி மலைமுரசிற்கு பேசவல்ல அதிகாரியொருவர் தெரிவிக்கையில் சுகாதார சேவையானது தொழில் ரீதியான சேவைகள் பலவற்றின் கலவையாகும். எமது நாட்டில் சுகாதாரச் சேவையில் ஈடுபட்டுள்ள தாதி, குறை நிரப்பு மேலதிக வைத்திய சேவைத் தொழிலாளர்களின் எண்ணக்கையை எடுத்தால் அது 45000 ற்கும் அதிகமாகும்.

ஆனால் சுகாதாரச் சேவையின் சம்பளங்கள் கொடுப்பனவுகள் வரப்பிரசாதங்கள் மற்றும் வசதிகள் அனைத்தும் ஒரு சேவைக்கு மாத்திரம் வழங்கப்படுதலும், எமது சேவைகளுக்கு வழங்கப்படாமையுமே பிரதான பிரச்சனையாக அமைகின்றது. ஆகவே 16 தொழிற்சங்கங்கள், விரைவில் தீர்க்கப்பட வேண்டிய பொதுவான 05 கோரிக்கைகளை நோக்காகக் கொண்டு ஒன்றிணைந்து தாதியர் குறைநிரப்பு மேலதிக வைத்திய சேவை ஒருமைப்பாட்டுச் சபை ஒன்று உருவாக்கப்பட்டு இப்போராட்டத்தை கீழ்க்காணும் 05 கோரிக்கைகளை மையமாகக் கொண்டு நடாத்தி வருவதாகவும் கூறினார்.

01. கடைமைத் தடைகள், மற்றம் போக்குவரத்தக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூ.10,000 ற்கான கொடுப்பனவொன்றைப் பெறல்.
02. ஆரம்ப வகுப்பின் மேலதிகநேர வேலைக் கொடுப்பனவை ரூ.200. ஆகும் வண்ணம் அதிகரித்துக் கொள்ளல். 03. முதல் மற்றும் விசேட வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு ரூ 4000.00 தொடர்பாடல் கொடுப்பனவை வழங்கல்.
04. அ.நி.சுற்று நிருபம் 7/2008ன் தொழிநுட்ப சேவையின் சம்பளத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதால் ஏனைய சேவைகளைப் பாதித்துள்ள சம்பளச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளல். 05. முதற் கட்டமாக முதல் மற்றும் விசேட வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு தீர்வை வரியற்ற வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்.

என்பனவே அக் கோரிக்கைகளாகும் எனத் தெரிவித்த அவர் பேச்சு வார்த்தைகள் ஊடாக தீர்வுகளைப் பெற்றுத்தர அதிகாரிகள் புறக்கணித்தால் நாடளாவிய ரீதியில் மாபெரும் பணிநிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார். (உதயா-அனுர)



## சாம்பல் தீவு மகாவித்தியாலயத்தில் ஒழுக்கக் கருத்தரங்கு

தி / சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பான ஒரு விழிப்புணர்வு கூட்டம் பாடசாலை அதிபர் திருமதி ம.உதயரெட்ணம் அவர்களின் தலைமையில் கடந்த வாரம் நடாத்தப்பட்டது.

அதிபர் தனது உரையில் தரமான கல்வியினூடாக தரமாக சமூகத்தைக் கட்டி எழுப்புவதே தற்கால கல்வியின் நோக்கம் என குறிப்பிட்டதுடன் தரமான சமூகமொன்றை கட்டி எழுப்புவதில் பாடசாலை பெரும்பங்கு வகிக்கிறது என்றார். தொடர்ந்து உரையாற்றிய வலயக்கல்வி திணைக்களத்தின் உதவிகல்வி பணிப்பாளர் திரு.யாக்குப்ஜான் அவர்கள் கல்வியில் மட்டுமின்றி இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் மாணவர்கள் ஒழுக்கம் பேணவேண்டிய அவசியம் பற்றி சுட்டிக் காட்டினார். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.கே. ஹரூப் அவர்கள் மாணவர்களின் ஒழுக்கத்தை சீர்குலைக்கும் காரணிகள் பற்றியும் அதிலிருந்து மாணவர்கள் எவ்வாறு தம்மை பாதுகாத்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக கருத்துக்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் கிராம ஆலயகுருக்கல், ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள்

## புனித மரியாள் கல்லூரி ஆரம்பப் பிரிவின் பரிசளிப்பு விழா

திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் கடந்த 29.10.2013 செவ்வாய்க்கிழமை மதியம் இரண்டு மணிக்கு ஆரம்பப் பிரிவு மாணவிகளின் பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை திரேசியன் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் அருட்சகோதரி. M.நிரோஷா A.C தலைமையில் நடைபெற்றது.

இதற்கு பிரதம விருந்தினராக இலங்கை, பாகிஸ்தான் புனித கார்மேல் சபை மாகாணத் தலைவி அருட்சகோதரி M. சுனித்தா A.C அவர்களும், கௌரவ விருந்தினராக வலயக் கல்வி நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. K. அரியநாயகம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பப்பிரிவு வலயக் கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. S. கணேசலிங்கம் அவர்களும் ஆசிரிய வள முகாமையாளர் திரு. S. தேவசகாயம் அவர்களும், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர். (ஜெய்)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இழுபறி நிலைக்குள்ளாகும் கல்முனை நகரத் தலைமைப் பதவி...

கல்முனை நகரசபைத் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு இடப்பட்ட கட்டளையை மக்கள் ஆதரவுடன் நிறைவேற்றாதிருக்க கல்முனை நகர சபையின் தற்போதைய முதல்வர் சிராஸ் மீராசாஹிப் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

கல்முனை மேயர் பதலியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு சிராஸ் மீராசாஹிபிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்டிருந்தார்.

இதற்கான காலக்கெடு இன்று வியாழக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில், தனக்கு வாக்களித்த சாய்ந்த மருது பிரதேச மக்களின் கருத்துக்களை கோருவதற்கான கூட்டமொன்றினை மேயர் சிராஸ் மீராசாஹிப் கடந்த புதன்கிழமை இரவு ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் போதே மேயர் பதவியிலிருந்து சிராஸ் மீராசாஹிப் இராஜினாமா செய்யக்கூடாது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இதன்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

கல்முனை மேயராக சிராஸ் மீராசாஹிப் தற்போது வகித்து வரும் பதவியில் குறித்த சபையின் ஆயுட்காலம் நிறைவடையும் வரை தொடர்ந்து இருக்க எமது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒப்புதலையும் அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும்.

தற்போது சாய்ந்தமருதின் அரசியல் அதிகார சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள விரிசலையும் சவாலையும் எதிர்காலத்தில் பூரணமாக தவிர்த்துக் கொள்ளும் நல்லெண்ணத்தில் அடுத்து வருகின்ற உள்ளூராட்சிக்கான தேர்தலை சாய்ந்தமருது தனியான ஓர் உள்ளூராட்சி மன்றமாக நின்று சந்திக்க எமது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம்

## "வாரஉரைகல்" பத்திரிகை ஆசிரியர் கஞ்சா வைத்திருந்தாரா?

காத்தான்குடியிலிருந்து வெளியாகும் பத்திரிகையான "வார உரைகல்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதாகியுள்ளார்.

கைதாகும் போது தனது வீட்டில் தான் கஞ்சா வைத்திருக்கவில்லை என்றும், இது அநியாயமாகத் தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு என்றும் அவர் தெரிவித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

200 கிராம் கஞ்சாவிற்கு 2 கிராம் குறைவாக வைத்திருந்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவரது கைதைத் தொடர்ந்து அவரது மனைவியும் மகனும் சட்டத்தரணி ஒருவரின் துணையுடன் காத்தான்குடிக் காவல் நிலையத்திற்குச் சென்று தமது தரப்பு நியாயத்தைத் தெரிவித்ததாகவும் தெரிகின்றது.

மேற்படி பத்திரிகையின் ஆசிரியரான எம்.ஐ.எம் றஹ்மத்துல்லா முன்னர் பல தடவைகள் தாக்குதலுக்குள்ளானதாகவும், உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளவராவார்.

நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட ஆசிரியர் இரண்டு லட்ச ரூபாச் சரீரப் பிணையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார். வழக்கு எதிர்வரும் 26ம் திகதி நடைபெறும்.


(அன்வர்)

## மீண்டும் சாம்பல்தீவு பிரதான வீதியில் கள்ளுக்கடை

சாம்பல்தீவு - திருகோணமலைப் பிரதான வீதியில் முன்னர் நிறுவப்பட்டிருந்த உல்லாச புரியான கள்ளுக்கடை அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் மீண்டும் அதே பெருந்தெருவில் நிறுவப்பட்டுள்ளது.

முன்னர் நிறுவப்பட்டிருந்த இடத்திற்குச் சற்று முன்னதாக நிறுவப்பட்டுள்ள இக் கள்ளுக்கடையைத் தாண்டிப் பாடசாலை மாணவ, மாணவிகள்

03





## 5ம் ஆண்டுப் புலமைப் பரீட்சை அகற்றப்படும் என நம்புகிறேன் - கல்வி அமைச்சர்

### -உயர்தரப் பரீட்சை முடிவுகள் டிசம்பரில்-



ஐந்தாம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புலமைப் பரீட்சையில் மாற்றம் கொண்டுவரப்படும் எனத் தான் நம்புவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். பெற்றோர், கல்வியாளர்கள், கல்வி உளவியலாளர்கள் போன்றவர்கள் இப் பரீட்சையானது குழந்தைகளுக்கு பெரும் சுமையாக மாறியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர் எனக் கூறியுள்ள அமைச்சர்,

03

## ஸ்ரீதரனின் செயலாளர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார் - சட்டத்தரணி



பயங்கரவாதத் தடைப்பிரிவுப் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டவர்கள் கடுமையாக சித்திரவதைப் படுத்தப்பட்டுள்ளதாக, நீதிமன்றில் சட்டத்தரணியால் தெரிவித்ததற்கு அமைவாக நாடாளு மன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் செயளாலரான பொ. லட்சுமிகாந்தனை (பொன்காந்தன்) சட்ட வைத்திய அதிகாரியின் முன் முன்னிலைப்படுத்தி சட்ட மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்யும் படி கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி அஜித் பிரியந்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி

03

சர்வதேச வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட். வின்சன்ட் மகளிர் உயர்தரபாடசாலை ஆசிரியர் திரு.வரதன் அவர்களும் மாணவிகளும் சேர்ந்து சேகரித்த 1008 புத்தகங்களை 31.10.2013ல் நூலகத்திற்குப் பாடசாலை அதிபர் அவர்களிடம் கையளித்த நிகழ்வின் போது. (சச்சு)




## சித்த மருத்துவக் கண்காட்சி

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலைவளாகத்தின் ஏற்பாட்டில், திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்துக் கலாசார மண்டபத்தில் சித்தமருத்துவக் கண்காட்சியொன்று மிகச் சிறப்பாக நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org